பக்கங்கள் : எட்டு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 04 சனிக்கிழமை (21.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 325

### றொக்கெட், ஷெல் தாக்குதல்களுடன்

## கடற்படை - கடற்புலிகள் நேற்று மாலை பருத்தித்துறைக் கடலில் ஒருமணிநேரம் மோதல்

பருத்தித்துறை முனைக்கடற்பகுதியில் நேற்றுமாலை சுமார் 6.30 மணிதொடக்கம் ஒருமணிநேரம் கடும் மோதல் இடம்பெற்றுள்ளது.

கடற்பகுதியில் பாரிய வெடிச்சத்தம் கேட்டதாகவும் அதன்பின்னர் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் கடும்மோதல் இடம்பெற்றது என்றும் கரையோர வாசிகள் தெரிவித்தனர்.

பலாலியில் இருந்து இருதடவைகள் வந்த ஹெலி அந்தப் பகுதியில் றொக்கெட் தாக்குதலை நடத்தியுள்ளது.

கடற்புலிகளின் படகுகளை இலக்கு வைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டள்ளது என்று கூறப்படுகின்றது.

மோதல் 7.30 மணி வரை தொடர்ந்தது. இதன் பின் மணற்காட்டு பகுதி கடலிலும் மோதல் இடம்பெற்றதாக அறியவந்தது.

இச்சம்பவத்தை அடுத்து மோதல் நடந்த பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

**மூன்று படகுகள் அழிக்கப்பட்டதாக அறிவிப்பு**

இச்சம்பவம் தொடர்பாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான தகவல் மையம் தெரிவித்ததாவது:-

நேற்றுமாலை 6மணியளவில் 15படகுகளில் வந்த கடற்புலிகள் கடற்படையினர் மீது தாக்குதலை ஆரம்பித்தனர். இந்தப் படகுகளில் மூன்று தற்கொலைத் தாக்குதல் படகுகளாகும்.

கடற்படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் இரண்டு தற்கொலைப் படகுகள் உட்பட மூன்று படகுகள் அழிக்கப்பட்டுள்ளன. ஏனைய படகுகள் முல்லைத்தீவுப் பிரதேசத்தை நோக்கித் திரும்புகையில் இராணுவத்தினரால் பல்குழல் பீரங்கித்தாக்குதல் நடத்தப்பட்டது. விமானப் படையினரும் விமானத் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதல்களில் கடற்புலிகள் தரப்பில் இருபதுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். கடற்படையைச் சேர்ந்த இருவர் காயமடைந்தனர் - எனத் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் கடற்படையின் இரு டோறாப் படகுகளை விடுதலைப் புலிகள் சேதமாக்கியதாக இணையத்தளங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

### தமிழர் தாயகத்தை கூறுபோடுவதை எதிர்த்து

# வடக்கு-கிழக்கு முழுவதும் 25ஆம் திகதி ஹர்த்தால்!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு

கொழும்பு, ஒக்ரோபர் 21

**தமிழர்களின் பூர்வீகத் தாயகமாகிய வடக்கு - கிழக்கு மாகாணத்தை மீண்டும் முறைப்படி இணைக்குமாறு கோரி தமிழர் தாயகம் எங்கும் எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமை பூரண கதவடைப்பு போராட்டம் நடத்தப்படவுள்ளது.**

**உயர் நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து தமிழர் தாயகத்தைக் கூறுபோட எடுக்கப்படவிருக்கும் முயற்சிகளுக்கு ஒருமித்த எதிர்ப்பை வெளிப்படுத்துமுகமாக அன்றைய தினம் பணிகள் அனைத்தையும் முழு அளவில் முடக்கி போராட்டத்தில் ஈடுபடுமாறு வடக்கு - கிழக்கு மக்களிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.**

பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கும் அறிவிப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுக்காலை நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டது.

மாநாட்டில் கலந்துகொண்ட மாவை சேனாதிராஜா எம்.பி. இதுபற்றி தெரிவித்ததாவது:-

ஒன்றுபட்ட நாட்டுக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டுமானால் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைத்திருக்க வேண்டும். கடந்த 18 வருடங்களாக வடக்கு - கிழக்கு இணைத்து ஒரே மாகாணமாக, ஒரு ஆளுநரின் கீழ் இருந்து வந்துள்ளது. இதையே கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் விரும்புகின்றனர்.

ஓகஸ்ட் 11ஆம் திகதி ஏ-9 வீதி மூடப்பட்டதன் பின்னர் யாழ். குடாநாட்டு மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். கிழக்கிலும் சில வீதிகள் மூடப்பட்டுள்

(08ஆம் பக்கம் பார்க்க)

### மாத்தளையில் தமிழர் மூவர் கைது

மாத்தளை, ஒக்.21

மாத்தளைப் பகுதியில் விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் மூன்று பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு வாகனங்களை விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10ஆம் திகதி வவுனியா - பெரியகுளம் பகுதியில் படையினரின் முகாம் அருகே வெடித்த வாகனத்தைத் தாங்களே விற்பனை செய்தனர் என்பதை மூவரும் ஒப்புக்கொண்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். ஏனைய இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இலங்கையில் போர் பரவுவது குறித்து இந்தியப் பிரதமர் கவலை தெரிவிப்பு



புதுடில்லி, ஒக்21

''இலங்கையில் உள்நாட்டுப் போர் பரவி வருவது கவலை அளிக்கிறது. கூட்டாட்சி முறைக்கு உட்பட்டு பிரச்சினைக்குத் தீர்வு காண இரு தரப்பினரும் முன்வர வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுடில்லியில் நேற்று நடந்த இராணுவத்தளபதிகள் கூட்டத்தில் பிரதமர் மன்மோகன் சிங் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:-

''அழிவையும், நாசத்தையும் ஏற்படுத்துவதற்காகத் தீவிரவாதிகள் நவீன முறைகளைக் கையாள்கின்றனர். இதை எதிர்கொள்வதற்காக நமது இராணுவத்தின் திறன்

(08ஆம் பக்கம் பார்க்க)

## மோதல்கள் தீவிரமடையாமல் தடுப்பதே அவசர தேவையாகும்

### எரிக் சொல்ஹெய்ம் கூறுகிறார்



கொழும்பு, ஒக்.21

இலங்கையில் இருதரப்புகளுக்கும் இடையில் தொடரும் மோதல்களைத் தீவிரமடையாது தடுப்பதே இன்றைய அவசர தேவையாகும் என நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஸ்ரீலங்கா அரசிற்கும் விடுதலைப்

(08ஆம் பக்கம் பார்க்க)




### மட்டக்களப்பில் விமானக் குண்டுவீச்சில் விநாயகர் ஆலயம் சேதம்

கொழும்பு, ஒக்.21

கிழக்கில் மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசங்களில் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

தரவை, இறால்குளம் கிராமங்கள் மீது 'கிபிர்' விமானங்கள் நடத்திய குண்டுத்

(08ஆம் பக்கம் பார்க்க)

## சுவிஸில் நடக்கும் பேச்சுக்கள் புதிய உத்வேகத்தை தரட்டும்!

### இதுவே அமெரிக்காவின் விருப்பம் என்கிறார் பௌச்சர்



கொழும்பு, ஒக்.21

சுவிஸில் நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ள பேச்சுகள் இலங்கையின் சமாதானத்துக்கு புதிய உத்வேகத்தை அளிப்பதாக அமையவேண்டும் என அமெரிக்கா விரும்புகிறது என்று அமெரிக்காவின் மத்திய மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்கான துணை அரசுத்துறைச் செயலர் ரிச்சர்ட் பௌச்சர் கூறினார்.

நேற்று கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எழுத்தாக்கல் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.21

யாழ். கல்விவலயப் பாடசாலைகளுக்கிடையேயான எழுத்தாக்கல் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். கோட்டப் பாடசாலைகளுக்கு புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்திலும், நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கு யாழ்.இந்து மகா வித்தியாலயத்திலும், கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் போட்டிகள் நடைபெறவுள்ளன.

பாடசாலை மட்ட எழுத்தாக்கல் போட்டியில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றுவதற்கான ஒழுங்குகளை மேற் கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களை யாழ். வலயக் கல்விப் பணிபாளர் வி.ரி. செல்வரத்தினம் கேட்டுள்ளார். (1-202)

# இடம்பெயர்ந்துள்ள கல்வியாளர்களை குடாநாட்டில் பணிபுரிய அனுமதிக்கவும்

### மாகாண பிரதம செயலருக்கு அவர்கள் மகஜர்

யாழ்ப்பாணம், ஒக்.21

இடம்பெயர்ந்து தற்காலிகமாக யாழ். குடாநாட்டில் தங்கியுள்ள கல்விசார் பணியாளர்களை தற்போது அவர்கள் தங்கியுள்ள பகுதிகளிலேயே பணிபுரிய அனுமதித்து அதற்கான வசதிகளைச் செய்து தரும்படியும் அப்பகுதிகளிலேயே அவர்களுக்குரிய கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள வசதி செய்து தரும்படியும் இடம்பெயர்ந்துள்ள கல்விசார் பணியாளர்கள் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பிரதம செயலாளரிடம் மகஜர் மூலம் கேட்டிருக்கிறார்கள்.

அரசபடைகளின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாத பகுதிகளில் இன்று நிலவுகின்ற நிலைமைகளை உத்தேசித்து தாங்கள் கடல் மார்க்கமாகவோ, விமானமார்க்கமாகவோ தமது இடங்களுக்கு போகக்கூடிய நிலையில் இல்லையென்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, மன்னார் மடுவலயம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த சுமார் 500 கல்விசார் பணியாளர்கள் இவ்வாறு இடர்ப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இவர்களில் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள் மற்றும் கல்வித் திணைக்கள பணியாளர்களும் அடங்குவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (ப)

## குறைகேள் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.21

குடாநாட்டின் தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் மக்கள் வாழ்வாதரத்தில் எதிர்கொள்ளும் குறைகளைக் கேட்டறிந்து பதிவுகள் செய்யப்பட்டுவருகின்றன.

மூளாய் சிறுவர் கல்விக்கும், பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் ஏற்பாட்டில் பல்வேறு இடங்களிலும் இந்த குறைகேள் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இன்று சனிக்கிழமை காலை 8மணிமுதல் நண்பகல் 12மணி வரை வலி. மேற்கு பிரதேச செயலகத்திலும் -

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8மணி முதல் நண்பகல் 12மணி வரையும் மறுநாள் திங்கட்கிழமை பிற்பகல் 2மணி தொடக்கம் 5மணிவரை காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனையிலும் - குறைகேள் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (1-202)

## பருத்தித்துறையில் காவலரண் மீது வேட்டு

யாழ்ப்பாணம், ஒக்.21

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு சமீபமாக ஓடக்கரையில் அமைந்துள்ள காவலரண் மீது நேற்று முற்பகல் 10.30 மணிக்கு வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இதனால் அப்பகுதியில் பதற்றநிலை காணப்பட்டது.

இந்தச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதிக்கு விரைந்த படையினர், அவ்விடத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களை விசாரணைக்கென அழைத்துச் சென்றுள்ளனர் என்றும் -

அப்பகுதி வெள்ளைவாய்க்கால் ஒழுங்கைக்கு தார் ஊற்றி செப்பனிட்டுக்கொண்டிருந்த, பருத்தித்துறை பிரதேச சபை ஊழியர்களும் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (1-15-78-115)

# உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஜெனிவாப் பேச்சை பாதிக்கும்!

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தெரிவிப்பு

வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைத்தது செல்லுபடியற்றது என்ற உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஜெனிவாவில் 28, 29ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுகளைப் பாதிக்கும்.

தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று செய்தியாளரொருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போது இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செய்தியாளர் மாநாடு நேற்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது. இங்கு செய்தியாளர்களது கேள்விகளுக்குப் பதிலளித்துக் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. கூறியதாவது:-

ஜனாதிபதிகள் ஆர்.பிரேமதாஸ, டி.பி.விஜேதுங்க, சந்திரிகா குமாரதுங்க ஆகியோரின் ஆட்சிக் காலங்களின்போது ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்ந்து இருந்துவந்தது. ஆனால், சில பேரினவாத சக்திகள் தொடர்ந்த வழக்கில் உயர்நீதிமன்றம் சட்டத்தின் நுணுக்கங்களைப்பயன்படுத்தி இணைப்பு செல்லாதெனத் தீர்ப்பளித்துள்ளது.

வடக்கு - கிழக்கு இணைப்பே சமாதானப் பேச்சுகளின் அத்திவாரமாகும். இந்த நிலையில் பேச்சுகள் எப்படி சாத்தியமாகும்?

✱ கேள்வி- புலிகள் ஹபரண- திகம்பொத்தன தாக்குதல், காலி துறைமுகத் தாக்குதல்களை புலிகள் மேற்கொண்டுள்ளனர். இதுபோன்ற தாக்குதல்களை புலிகள் நிறுத்தவேண்டுமென நீங்கள் அழுத்தம் கொடுப்பீர்களா?

●பதில்:- அழுத்தம் கொடுக்கத் தேவையில்லை வடக்கு - கிழக்கில் இடம்பெறும் தாக்குதல்கள் படையினரே மேற்கொள்கின்றனர். அரசுதான் மோதலை நிறுத்தி பேச்சுக்கான சாதகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அரசுக்கே இப்பொறுப்பு இருக்கின்றது - என்றார். (ஐ)

## குடும்பக்கட்டுப்பாடு குறித்த பயிற்சி

யாழ்ப்பாணம் மற்றும் தீவக வலயக்கல்விப்பணிமனைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான யௌவன கர்ப்பமும், குடும்பக் கட்டுப்பாடும் தொடர்பான விழிப்புணர்வு பயிற்சிநெறி நாளையும், செவ்வாய்க்கிழமையும் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். பிரதிமாகாண சுகாதாரசேவைப் பணிப்பாளர் அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். கல்விப்பணிமனை ஆசிரியர்களுக்கான இப்பயிற்சிநெறி நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9மணி தொடக்கம் பிற்பகல் 4மணிவரையும் -

தீவக வலயக்கல்விப் பணிமனை ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 4மணிவரையும் - நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ள உள்ள ஆசிரியர்களுக்கான அழைப்புக்கடிதங்கள் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (1-51)

# குடாநாட்டில் இரு தினங்களில் ஆறுபேர் சுட்டுக்கொலை

### நகரப்பகுதியில்

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாகத் தேநீர்க்கடை நடத்திவந்த ஒருவர் நேற்று முன்பகல் 10.30 மணியளவில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வரான குருசாமி கதிரவேலு (வயது 44) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

பலியானவர் கடையில் இருந்த வேளை இனந்தெரியாதவர்கள் இவரை சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் எனவும் -

படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் அங்கு மரணமானார் என்றும் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் குறித்து யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா விசாரணைகளை நடத்தினார். (1-15-78-68)

### நவக்கிரியில்

நவக்கிரி,ராஜபாதையில் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் இருவர் உயிரிழந்தனர்.

துன்னாலை, கரவெட்டியைச் சேர்ந்த வேலுப் பிள்ளை தியாகராஜா (வயது 59), அச்சுவேலி, நாவலடியைச் சேர்ந்த குலம் குணராசா (வயது 27) ஆகியோரே மரணமானவர்கள் ஆவார்.

யாழ்ப்பாணத்தில் வியாபாரத்தில் ஈடுபடும் இருவரும், வேலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தனர் என்றும்-

அப்போது வழிமறித்த இனந்தெரியாதோர் அவர்களைச் சுட்டுவிட்டுச் சென்றனர் என்றும் - விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மல்லாகம் நீதிவான் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தியபின் சடலங்களை பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.(1-68)

### நிலாவரையில்

அச்சுவேலி, நிலாவரையில் நேற்றுமுன்தினம் மாலை இளைஞன் ஒருவரின் சடலம் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டது.

அச்சுவேலி, தோப்பைச் சேர்ந்தவரும் வாய் பேசாதவருமான இளை தம்பி கிருபாகரன் (வயது 31) என்பவரே சுடடுக்கொல்லப்பட்டவராவார்.

வர்ணம் தீட்டும் தொழிலில் ஈடுபடும் இவர் வேலையால் திரும்பிக்கொண்டிருந்த வேளை வழிமறித்த இனந்தெரியாதவர்கள் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. அச்சுவேலி வைத்தியசாலைக்கு சடலம் எடுத்துச்செல்லப்பட்டது.

அங்கு சென்ற மல்லாகம் நீதிவான் விசாரணைகளை நடத்தி சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார். (1)

### கரவெட்டியில்

வடமராட்சி, கரவெட்டி சண்டிக் குளம் பகுதியில் நேற்று காலை 8.30 மணி யளவில் இனந்தெரியாதவர்களால் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். கரவெட்டி மத்தொனிப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான தியாகராஜா தில்லைநாதன் (வயது .8) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

மரணமானவர் தண்ணீர் எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்துகொண்டிருந்தவேளையில் இனந்தெரியாதவர்கள் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதிவான் சடலத்தை பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.(115-173-155-203)

### சம்பந்தர் கடையடியில்

கரவெட்டி சம்பந்தர் கடையடியில் நேற்று முன்தினம் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார். கரவெட்டி மேற்கு ஸ்ரீநாரத வித்தியாலயத்திற்கு அண்மையில் வசித்துவந்தவரான கந்தன் உதயகுமார் (வயது 37) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவர் மீன் வியாபாரம் செய்பவரெனவும் வியாபாரம் முடித்து வீடு திரும்பும் வேளை இனந்தெரியாதவர்கள் இவரை சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகவும் கூறப்படுகின்றது. சடலம் மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.(155-173-115-203)

# கொள்ளையில் ஈடுபட்ட நபர்களை மக்கள் ஒன்றுகூடி விரட்டினர்

### தப்பி ஓடிய ஒருவர் கிணற்றில் வீழ்ந்து மரணம்

யாழ்ப்பாணம், ஒக்.21

வியாழக்கிழமை நள்ளிரவு ஆயுதங்களுடன் யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த திருடர் குழு அங்குள்ள பொருள்களைத் திருடிக்கொண்டு, பக்கத்து வீட்டுக்குச் சென்றது.

அங்கிருந்தவர்கள் கூக்குரல் இடவே வேட்டுக்களைத் தீர்த்துக்கொண்டு ஓடிய திருடர் குழுவில் ஒருவர் நீராவியடியில் உள்ள கிணறு ஒன்றுக்குள் வீழ்ந்து உயிரிழந்தார்.

இச்சம்பவம் குறித்து அறியப்படுவதாவது:-

நடுநிசி நேரத்தில் கூரிய ஆயுதங்கள், வாள்கள் மற்றும் துப்பாக்கிகள் சகிதம் சென்ற திருடர் கோஷ்டி ஒன்று 'வீட்டைச் சோதனை செய்யப்போகிறோம் வீட்டைத் திறவுங்கள்' என்று உத்தரவிட்டுள்ளது.

உரிமையாளர்கள் வீட்டைத் திறககாததை அடுத்து கதவை உடைத்து நால்வர் அடங்கிய திருடர்குழு அங்கு இருந்தவர்களை அச்சுறுத்தி சுமார் 50ஆயிரம் ரூபா பணம் மற்றும் 15பவுண் நகைகளை அபகரித்துக் கொண்டுசென்றது.

தொடர்ந்து அருகில் உள்ள வீட்டுக்குள் இக்குழு சென்று கதவை உடைத்து உள்ளே செல்ல முயன்றது.

அங்கிருந்தவர்கள் கூக்குரல் இட்டனர். இதனால் அருகில் உள்ளவர்கள் கூடவே திருட்டுக்குழு எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்தனர்.

பின்னர் மதில் பாய்ந்து தப்பி ஓடிக்கொண்டிருந்த வேளை, ஒருவர் அருகில் உள்ள கிணறு ஒன்றுக்குள் வீழ்ந்து உயிரிழந்தார்.

யாழ். நீதிவான் இ.த. விக்னராஜா நேற்று நண்பகல் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

சடலத்தை கிணற்றில் இருந்து மீட்டு யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ-1-79-68)

## இதய அஞ்சலிகள்



இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத்தின் பிரதம பாதுகாப்பு அதிகாரியான க.தர்மகுலசிங்கத்தின் தாயாரும் றோட்டேரியன் த.நிலயோஜினி தர்மகுலசிங்கத்தின் மாமியாருமான

**திருமதி கந்தையா கனகம்மா**

அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்கின்றோம்.

**யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்.**

## மரண அறிவித்தல்

### *கந்தசாமி நித்தியானந்தம்*

*(ஓய்வுபெற்ற சாரதி, இ.போ.ச.)*

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தசாமி நித்தியானந்தம் நேற்று (20.10.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2006) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*131/4, பருத்தித்துறை வீதி,*
*[சிவன் கோயில் முன் ஒழுங்கை]*
*நல்லூர்.*

**தகவல்:**
**மனைவி,**
**பிள்ளைகள்.**

## ஆஸ்பத்திரியில் கொல்லப்பட்டோர் நினைவுதினம் இன்று

யாழ்ப்பாணம், ஒக்.21

யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையின் போது படுகொலை செய்யப்பட்ட 21ஊழியர்களினது 19ஆவது நினைவுதினம் இன்றாகும்.

1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21ஆம் திகதியன்று இந்திய அமைதிப்படையினரால் கடமையில் இருந்த டாக்டர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் உட்பட 21 ஊழியர்கள் கண்மூடித்தனமாக சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இன்று காலை 9மணிக்கு அவர்களின் நினைவாக திருவுருவப்படங்களுக்கு 21ஈகச் சுடரேற்றி மலர்மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டு, நினைவுக் கூட்டமும் நடைபெறும்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெறும் மேற்படி நிகழ்வுகளின் முடிவில் வைத்தியசாலை வளாகத்தில் அமைந்திருக்கும், இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் ஆத்ம சாந்திப் பூசைகள் நடைபெறும்.

உயிரிழந்தவர்களின் பெற்றோர், உறவினர்களும் இந்நிகழ்வில் பங்குகொண்டு அஞ்சலி செலுத்தவுள்ளனர். (1-15-78)

## மெய்கண்டநாயனார் குருபூசை நிகழ்வு

கல்வியங்காடு,ஒக்.21

யாழ்ப்பாணம் சைவப்புலவர் சங்கமும், யாழ்மகளிர் கல்லூரியும் இணைந்து நடத்தும் மெய்கண்ட நாயனார் குருபூசைநிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.மானிப்பாய் மகளிர் கல்லூரி ஞான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சைவப்புலவர் நித்தியதசீரனின் சிறப்புச்சொற்பொழிவு மற்றும் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (1-79)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நீதிமன்றத் தீர்ப்பால் முஸ்லிம்கள் அக மகிழ முடியாது

# தமிழ்ச் சகோதரர்களுக்கு அநீதியெனில் கண்ணை மூடிக்கொண்டிருக்க முடியாது

## பாராளுமன்றத்தில் ரவூப் ஹக்கீம் உருக்கம்



தமிழ்ச் சகோதரர்களுக்கு அநீதி இழைக்கப்படும் போது எம்மால் கண்களை மூடிக் கொண்டிருக்க முடியாது. அதே வேளை, உயர் நீதிமன்றத் தீர்ப்புத் தொடர்பாக முஸ்லிம் மக்கள் அக மகிழவும் முடியாதென கூறிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் வடக்கு, கிழக்கு தொடர்பாக கூறிய சில கருத்துகளால் ஜே.வி.பி, ஹெல உறுமய, அமைச்சர் தினேஷ் குணவர்த்தன போன்றோர் கொதித்தெழுந்தனர்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை விசேட கூற்றொன்றை வெளியிட்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த ரவூப் ஹக்கீம் மேலும் கூறியதாவது;

"உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினால் தமிழ்க் கட்சிகள் விரக்தியடைந்துள்ளன. இந்த தீர்ப்பானது இனப்பிரச்சினைக்கு மேலும், தூபமிடுவதாக அமைந்துள்ளதாகவே கூறப்படுகிறது. எனவே, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பாக அரசு தீவிரமாக ஆராய வேண்டும். அதில் ஏதாவது திருத்தம் கொண்டு வர முடியுமா என பரிசீலிக்க வேண்டும்.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில் வட, கிழக்கு இணைப்பு தற்காலிகமானது என்றே குறிப்பிட்டது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இது நீண்டகாலமாக அமுல்படுத்தப்படுகிறது.

வடக்கு, கிழக்கு தமிழ், முஸ்லிம்களின் தாயகம், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூட ஐ.தே. கட்சிக் காலத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் வடக்கு, கிழக்கு தமிழருக்கு மட்டுமன்றி, முஸ்லிம்களுக்குமுரிய தாயக பூமி என்று கூறியதை இங்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

கிழக்கு மாகாணம் 1987 ஆம் ஆண்டு நிலைமைக்குச் சென்றுள்ளது. இது முஸ்லிம் மக்களுக்கு மகிழ்ச்சியான விடயம் தானே என்று ஜே.வி.பி.எம்.பி. அஞ்ஞான் உம்மா என்னிடம் கேட்டார்.

ஆனால், ஒரு பொறுப்புள்ள முஸ்லிம் அரசியல் கட்சியின் தலைவரென்ற வகையில் அவரின் கேள்விக்கு என்னால் சுலபமான பதிலொன்றை வழங்க முடியவில்லை. தமிழ் சகோதரர்களுக்கு அநீதி நடக்கும் போது எம்மால் கண்களை மூடிக் கொண்டிருக்க முடியாது. உயர் நீதிமன்ற தீர்ப்பையிட்டு முஸ்லிம்கள் அக மகிழவும் முடியாது".

### ஆத்திரமடைந்த தினேஷ் குணவர்த்தன

வடக்கு, கிழக்கு தமிழ், முஸ்லிம்களின் தாயக பூமியென ரவூப் ஹக்கீம் கூறியதனால் ஆத்திரமடைந்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில் வடக்கு, கிழக்கு சிங்கள, தமிழ், முஸ்லிம்களின் தாயகமென்றே கூறப்பட்டுள்ளது. ஆனால் இங்கே ரவூப் ஹக்கீம் வேண்டுமென்றே சிங்களவர் என்ற சொற்பதத்தை நீக்கி தமிழ், முஸ்லிம்களின் தாயக பூமியெனக் கூறுகின்றார் என உணர்ச்சி வசப்பட்ட நிலையில் கூறினார்.

இதையடுத்து ஜே.வி.பி.உறுப்பினர்களும் ரவூப் ஹக்கீமுக்கு எதிராக கூச்சலிட்டனர்.

## நிவாரண உதவி நிறுத்தம்

உள்நாட்டில் இடம்பெயர்ந்து நண்பர்கள் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கு அரசினால் வழங்கப்பட்டு வந்த நிவாரணங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளதாக தேசத்தைக் கட்டி எழுப்பும் அபிவிருத்திக்கான அமைச்சு அறிவித்துள்ளது.

மாவட்ட அரச அதிபர்களுக்கும் பிரதேச செயலாளர்களுக்கும் இந்த அறிவிப்பு தெரியப்படுத்தப்பட்டு உடனடியாகவே அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

தமது சொந்த இடங்களிலிருந்தும் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்கு அரசினால் நிவாரண உலர் உணவுப் பொருட்கள் 1987 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த அறிவிப்பினால் இடம்பெயர்ந்த மூவின மக்களும் நிவாரணங்களைப் பெறமுடியாது அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

# இலங்கைப் பிரச்சினையில் தலையிடுமாறு இந்தியப் பிரதமரிடம் நெடுமாறன் கோரிக்கை

இலங்கைப்பிரச்சினையில் தலையிடுமாறு இந்தியப் பிரதமருக்கு தமிழ் ஈழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளர் பழ.நெடுமாறன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ராஜீவ் காந்தி - ஜெயவர்த்தன உடன்பாட்டின் படி இலங்கையின் வடக்கு, கிழக்கு மாநிலங்கள் இணைக்கப்பட்டது செல்லாது என்று இலங்கை உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. இந்தத் தீர்ப்பு ஈழத்தமிழர்களுக்கு எதிரானது மட்டும் அல்ல இந்தியாவுக்கு விடப்பட்டுள்ள அறை கூவலாகும்.

வடக்கு, கிழக்கு மாநிலங்கள் இணைப்புக் குறித்து இலங்கை பாராளுமன்றத்தில் அரசு சட்டம் கொண்டுவந்தால் அதை ஆதரிப்போம் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். எனவே, இந்திய அரசு இதில் தலையிட்டு உடனடியாக இணைப்புத் தீர்மானத்தை இலங்கைப் பாராளுமன்றத்தில் கொண்டுவரும் படி இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கை கேட்டுக்கொள்கிறோம்.

# பயங்கரவாதத்திற்கு எதிரான போருக்கும் சமாதான முயற்சிகளுக்கும் அமெரிக்கா உதவும்

இலங்கையின் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்திற்கும் அதன் சமாதான முயற்சிகளுக்கும் சகல வழிகளிலும் அமெரிக்கா ஆதரவளிக்கும் என அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சட் பௌச்சர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வியாழக்கிழமை சந்தித்த வேளை அவர் இந்த உறுதிமொழியை அளித்ததாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது; இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சட் பௌச்சர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தார்.

விடுதலைப் புலிகளின் வன்முறை நடவடிக்கைகளை குறிப்பாக ஹபரணை மற்றும் காலி கடற்படை தளத்தின் மீதான தாக்குதல்களை அவர் கண்டித்தார்.

பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் அமெரிக்கா உறுதியான நிலைப்பாட்டை கொண்டுள்ளதாக உறுதியளித்த பௌச்சர் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்திலும் சமாதானத்திற்கான தேடலிலும் இலங்கைக்கு சகல வழிகளிலும் அமெரிக்கா ஆதரவளிக்கும் எனவும் தெரிவித்தார்.

ஜெனீவா பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வரும் சூழலில் விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான வன்முறைகள் உதவிகரமானதாக அமையவில்லை என தெரிவித்த ஜனாதிபதி எனினும் இனப் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலமாக தீர்வைக் காண்பது குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் தீர்வு காணப்படும் வரை பேச்சுவார்த்தை மேசைகளில் இருப்பதை சர்வதேச சமூகம் உறுதி செய்ய வேண்டுமென ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

இலங்கையின் பிரதான கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள இணக்கப்பாட்டினையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு குறித்தும் ஜனாதிபதி எடுத்துக் கூறினார்.

# இனநெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு வடக்கு கிழக்கு இணைப்பு அவசியம்

### சர்வதேச வை.எம்.எம்.ஏ.சம்மேளனம்

இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றை நோக்கிய நகர்வுகளுக்கு வடகிழக்கு இணைப்பு மிக முக்கியமானதாக கருதப்படுவதால் வடகிழக்கு இணைப்புக்கான நிலைப்பாட்டுக்கு ஆளும் கூட்டணி அரசு கூடுதல் அழுத்தம் கொடுக்க வேண்டும் என சர்வதேச வை.எம்.எம்.ஏ. சம்மேளனம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளது.

மேற்படி சம்மேளனத்தின் தலைவர் ஷாஜிஎம்.அஷ்ரப் ஹூஸைன் விடுத்திருக்கும் இந்த பகிரங்கக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

இலங்கை ஜனநாயகக் குடியரசின் 13 ஆம் இலக்கச் சட்டத்திருத்தத்தின் அடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பது சட்டத்திற்கு முரணானது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இத்தீர்ப்பு இன்று நாட்டின் மிகப் பாரிய பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன. இனவாதிகளும் இனவாதக்கட்சிகளும் இதனால் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளன. ஆனால், நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் இதனையிட்டு திருப்திப்பட்டுக் கொண்டுள்ளதா என்பது கேள்விக்குரியதாகும்.

நாட்டின் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இணைப்பை ஆதரிக்கும் அதே நேரம், ஆளும் கூட்டணி இதுவரை அதன் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவில்லை. இருந்தாலும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை நோக்கிய நகர்வுகளுக்கு வடக்கு கிழக்கு இணைப்பு அவசியம் தேவை என்ற நிலைப்பாட்டிற்கு ஆளும் கூட்டணி வருவதற்கு அழுத்தம் கொடுக்கப்படலாம் என்றே தோன்றுகிறது. வடகிழக்கு இணைப்பை நாட்டின் இடதுசாரிக் கட்சிகளும் ஆதரிக்கின்றன.

இந்நிலையில் வடக்கு கிழக்கு இணைப்பில் இந்நாட்டு முஸ்லிம்களின் கருத்துக்கள் முக்கியமானதாகும். குறிப்பாக, வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் கருத்து மிக முக்கியமாகும்.

# ஊழியர் நம்பிக்கை நிதி, சேமலாப நிதியை செலுத்தாத நிறுவனங்கள் மீது நடவடிக்கை

ஊழியர் நம்பிக்கை நிதி, ஊழியர் சேமலாப நிதி ஆகியவற்றை முறையாக செலுத்தாத ஸ்தாபனங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரித்த தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள், அமைச்சர் அதாவுட செனவிரத்ன அந்தந்த ஸ்தாபனங்களுக்கு பொறுப்பானவர்களும் சட்டத்திற்கு முன் நிறுத்தப்படுவார்களெனவும் தெரிவித்தார்

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊழியர் நம்பிக்கை மற்றும் சேமலாப நிதி தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் பதிலளித்து பேசும் போதே அமைச்சர் செனவிரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை விவாதத்திற்கு சமர்ப்பித்து உரையாற்றிய ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க, வர்த்தக வங்கிகளில் நிலையான வைப்புகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதம் ஊழியர்களின் நம்பிக்கை மற்றும் சேமலாப நிதிகளுக்கு வழங்கப்பட வேண்டுமென அரசை வலியுறுத்தினார்.

தனியார் துறையில் சுமார் 65 இலட்சம் பேர் பணியாற்றுகின்ற போதிலும் இதில் பெரும்பாலானோருக்கு முறையாக ஊழியர் நம்பிக்கை மற்றும் சேமலாப நிதியங்களுக்கு உரிய தொகை செலுத்தப்படுவதில்லையென குற்றஞ்சாட்டிய வசந்த சமரசிங்க எம்.பி. மேலும் பேசுகையில்:

அரசாங்கம், ஊழியர்களின் மேற்குறித்த நிதியங்களில் இருந்து நிதிகளைப் பெற்று தனது பிரதான தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு அமைவாக அதற்குரியவர்களுக்கு உரிய வட்டி வீதம் வழங்கப்பட வேண்டும்.

தனியார் துறையினர் தங்களது சேவைகளில் இருந்து ஓய்வுபெறும் போது அவர்களுக்கு இருக்கும் ஒரே பலம் இந்த ஊழியர் நம்பிக்கை மற்றும் சேமலாப நிதியங்கள் மட்டுமே. எனவே, இந்த நிதிகளுக்கு வர்த்தக வங்கிகளில் நிலையான வைப்புக்கு வழங்கப்படும் வ[illegible] வேண்டும் என்றார்.

# சமாதான முயற்சியில் கவனம் செலுத்த ஐ.தே.க.முழு ஒத்துழைப்பு வழங்கும்

## மகாநாயக்கர்களிடம் ரணில் உறுதியளிப்பு

அரசாங்கம் சமாதான முயற்சிகளில் முழு அளவில் கவனம் செலுத்தும் பொருட்டு சகல வழிகளிலும் அனுகூலங்களை ஏற்படுத்திக் கொடுக்க ஐக்கிய தேசியக் கட்சி உறுதியளித்திருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மல்வத்தை, அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்களிடம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலையில் கண்டிக்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மல்வத்தை பீடாதிபதி திப்பட்டுவாவே சித்தார்த்த சுமங்கள தேரோவையும் அஸ்கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்தரக்கித தேரோவையும் சந்தித்து கலந்துரையாடினார்.

சமாதான செயற்பாடுகளை முன் கொண்டு செல்வதற்கு இரு பிரதான கட்சிகளும் ஒன்றுபட்டுச் செயற்பட முன்வந்தமை இன்றைய காலகட்டத்தின் முக்கிய தேவைப்பாடாகும் என இரு பீடாதிபதிகளும் சுட்டிக்காட்டினர்.

இங்கு கருத்துத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க கூறியதாவது;

வடக்கு, கிழக்கு நெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றின் அவசியம் குறித்தும், இந்தியாவை முன்மாதிரியாகக் கொண்டு அதிகாரப்பகிர்வுக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருப்பதால் அதற்கு பூரணமாக ஒத்துழைப்பு வழங்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்திருக்கின்றது.



அதேபோன்று ஆறு அம்சத்திட்டத்தின் கீழ் பொதுவேலைத்திட்டத்தை நடைமுறைச்சாத்தியமாக்குவதற்கு அடுத்த இரு தினங்களில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடவிருக்கின்றேன்.

சமாதான முயற்சிகளில் முழுமையான கவனத்தைச் செலுத்தக் கூடிய வகையில் வரவு - செலவுத்திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் ஆதரவளிப்பதென முடிவு செய்திருக்கின்றோம்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி புதியதொரு அரசியல் கலாசாரத்தை நாட்டில் தோற்றுவிக்க வேண்டுமென்பதாகவே புதிய பாதையை தேர்ந்தெடுத்து அரசுக்கு ஒரு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றது. இதனை ஜனாதிபதியும், அவரது அரசும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க பீடாதிபதிகளிடம் எடுத்துரைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**21.10.1987, 22.10.1987 அன்று கடமையின் போது மரணித்த உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்**

01. வைத்திய நிபுணர் அ.சிவபாதசுந்தரம்
02. வைத்திய கலாநிதி கே.பரிமேலழகர்
03. வைத்திய கலாநிதி கே.கணேசரத்தினம்
04. திருமதி பா.வடிவேலு
05. செல்வி லீலாவதி முத்தையா
06. செல்வி மங்கையற்கரசி இராமநாதன்
07. திரு.கே.செல்வராசா
08. திரு.கே.கிருஷ்ணராசா
09. திரு.மு.துரைராசா
10. திரு.மி.சண்முகலிங்கம்
11. திரு.வி.வரதராசன்.
12. திரு.கே.வேதாரண்யம்
13. திரு. யோன்பீற்றர்
14. திரு.இ.சுகுமார்
15. திரு.க.சிவயோகநாதன்
16. திரு.எஸ்.ஜெகநாதன்
17. திரு.கே.சிவராசா
18. திரு.கோ.உருத்திரன்
19. திரு.க.மார்க்கண்டு
20. திரு.இ.இரத்தினராசா
21. திரு.க.நவரத்தினம்

பணிப்பாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

(ச-51185)

## சந்நிதியில் இன்று தீபாவளி விசேட பூசை

வடமராட்சி,ஒக்.21

தீபாவளிப் பண்டிகையையொட்டி தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோவிலில் இன்று சனிக்கிழமை விசேட பூஜை, அபிஷேகம் என்பன நடைபெறும். (202)

## அருள் ஒளி வெளியீடு

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தினரால் வெளியிடப்படும் அருள் ஒளி நூலில் 49ஆவது பிரதி வெளியிடப்பட்டுள்ளது. ஆலய பரிபாலன சபைத் தலைவி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இந்நூலை வெளியிட்டு வைத்துள்ளார். (202-86)

## ஆசிரியர்களுக்குச் செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்.ஒக்.21

யாழ்.வலயக் கல்வித் திணைக்களமும் புலம் பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனமும் இணைந்து நடத்தும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஒன்று எதிர் வரும் திங்கள் முதல் புதன்வரை மூன்று தினங்கள் யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

'உள சமூக மேம்பாட்டு சீர்மியமும் வழிகாட்டலும்' என்னும் விடயத்தை உள்ளடக்கி இச் செயலமர்வ நடைபெறவுள்ளது.

இதேவேளை - தென்மராட்சிக் கல்வி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் அடுத்த மாதம் இரண்டாம் மூன்றாம் திகதிகளில் சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரியிலும்-

தீவக கல்வி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் அடுத்த மாதம் ஆறாம், ஏழாம் திகதிகளில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

இச் செயலமர்வுகளில் வலய ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட முன்பள்ளி ஆசிரியர் கலந்து கொள்வாரென செயலமர்வின் இணைப்பாளர் த.பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார். (1-203)

## முதலாம் ஆண்டு இதயம் ஆறாத நினைவுகள்

அன்னை மடியில்
08 . 02 . 1938



இறைவன் மடியில்
05 . 10 . 2005

### ஆசாரி முருகர் இரத்தினம்

திதி:21.10.2006

ஐயா! நூறாண்டு வாழ்வீர்கள் என நினைத்து
சந்தோசத்தில் வாழ்ந்திருக்கையிலே எம் இதயந்தனை
கண்ணாடி போல் உடைத்து எம்மை விட்டு
எங்கு சென்றீர்கள் ஐயா!
காலங்கள் ஓராண்டு சென்றாலும் எம் இதயந்தனில்
உங்கள் நினைவு நிலைத்திருக்கும்
விலையில்லா பாசத்திற்கும் பண்பிற்கும் இலக்கணமாய்
வாழ்ந்து காட்டி உலகத்திற்கு எங்களை
உங்கள் பிள்ளைகள் என அடையாளம் காட்டும்
வேளை வரும்போது பாதி வழியில் எம்மை விட்டுச் சென்றீர்களோ!
எமக்கு இனி வழி சொல்ல ஒரு ஐயாவை
நூறாண்டு சென்றாலும் தேட முடியுமோ?
சூரியன் தான் வெளிச்சந் தந்தாலும் எங்கள் இதயம்
இருளாய்த்தான் இருக்கும் மீண்டும் ஒரு பிறப்பு
உண்டேல் எங்கள் வீட்டில் பிறக்க வேண்டும்.

**உங்கள் ஆன்மா ஈடேற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**
**சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

காளிகோவிலடி,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

என்றும் ஆறாத் துயரில் வாடும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

(54461)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



அமரர்

### விஸ்வலிங்கம் சற்குனேஸ்வரன்

(சற்குணம்)

மலர்வு 12.11.1965
உதிர்வு 07.09.2006

*கடந்த 07.09.2006 அன்று அகாலமரணமடைந்த எமது குடும்பத் தலைவரின் சபிண்டீகரண நிகழ்வுகள் இன்று (21.10.2006) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

63, பெரியதம்பிரான் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

**மனைவி கெளரி**

(54522)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
01 . 08 . 1928



மறைவு
21 . 09 . 2006

அமரர்

### குழந்தைவேலு வள்ளிப்பிள்ளை

அன்னையாய் தாயாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய்
வாழ்ந்திட்ட எம் தாயே!
மாதம் ஒன்று சென்றாலும்
மாறாது எம் துயரம்
எத்தனை ஆயிரம் உறவுகள் தான் இருந்தென்ன
அம்மா என்றழைக்க
நீங்கள் இல்லையே எம் அருகில்
உங்கள் பூஞ்சோலையில் பூத்துக் குலுங்கிய மலர்கள்
வாடி வதங்குவது உங்களுக்குத் தெரியவில்லையா?
அம்மா எம்மை விட்டுப் பிரிந்தாலும்
எங்கள் நினைவோடுதான் இருப்பீர்கள்
காலங்கள் மாறினாலும் காந்திரமாக நீங்கள்
எங்களோடு வாழ்ந்த காலங்கள் என்றும் மாறாது.

முதலியார் லேன்,
கோப்பாய் வடக்கு.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(54513)

## இரண்டாம் ஆண்டு நினைவில்

அன்னை மடியில்
03 . 09 . 1944



ஆண்டவன் அடியில்
09 . 11 . 2004

### கணபதிப்பிள்ளை ஜெயராஜா

(ஓய்வு பெற்ற அதிபர்)

**திதி: 21.10.2006**

நீங்காத நினைவலைகளில் நீக்கமற நிறைந்த எம் அன்புத்தெய்வமே!
பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்த் திகழ்ந்து
கண்ணை இமை காப்பதுபோல எம்மைக்காத்து
அன்புவழி நின்று அரவணைத்தீர்
ஆண்டு இரண்டு சென்றாலும் மனம் தணிந்திடுமா எம் செல்வமே!
ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன?
உங்கள் அன்பிற்கு ஈடாகுமா ஆறுதலடைவதற்கு
உடனிருந்தோர் துடிதுடிக்க உற்றார், உறவினர் உருகிநிற்க
உமது பயணத்தை முடித்துச் சென்ற மாயமென்ன?
கூடி வாழ்ந்த வாழ்க்கைகூட பாதிவரை போதும் என்று எம்மை விட்டுச்சென்றீரோ!
நீங்காத நினைவுகளால் கலையாத கனவுகளால்
எம் நெஞ்சத்தில் வாழும் எம் பாச மலரே
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

உங்கள் பிரிவால் துயருறும்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Micro media Flash MX
Course Fee :2000/=

[illegible] ஆரம்பம்:- 23/10/2006 - 08.30am

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். குடாநாட்டில் குடிதண்ணீர் மாசடைந்துள்ளமை கண்டுபிடிப்பு

## உடன் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த யுனிசெவ் அதிகாரி ஆலோசனை

குடாநாட்டில் குடிதண்ணீர் கிணறுகளின் தண்ணீர் மாசடைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. எனவே கிணறுகளைச் சுத்திகரிக்க வேலைத்திட்டங்கள் உடன் முன்னெடுக்கப்படவேண்டும்.

- இவ்வாறு யுனிசெவ் அமைப்பின் சுகாதாரம் தொடர்பான தொழில்நுட்ப நிபுணர் ஜோன் ஆலோசனை வழங்கியுள்ளார்.

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற மாதாந்த பொதுச் சுகாதாரக் கலந்துரையாடலிலேயே இந்த அறிவுறுத்தலை அவர் விடுத்தார்.

இது குறித்து யுனிசெவ் அதிகாரி கூறியதாவது:-

குடிதண்ணீர் கிணறுகளின் அருகில் கழிவுநீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். புதிய நவீன முறைகளைப் பயன்படுத்தி சனத்தொகைக்கேற்ப கிணறுகளின் சுகாதாரத்தைப் பேணுவதில் அதிக கவனம் எடுக்கவேண்டும்.

தண்ணீர் விநியோகிப்பதற்கென பிளாஸ்ரிக் தொட்டிகளையும் பௌசர்களையும் பயன்படுத்தும்போது தண்ணீரில் குளோரின் இடப்பட்டுள்ளதா என்பதைப் பொறுப்பானவர்கள் பரிசோதித்து அறியவேண்டும் - என்றார்.

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் அரசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள், நலன்புரி நிலையங்களில் பணிபுரியும் சுகாதார அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (202-51)

## வடமராட்சியில் வீதிகளில் வாகனங்கள் நிறுத்தத் தடை

வடமராட்சிப் பிரதேசத்தில் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வீதி ஓரங்களில் சைக்கிள் மற்றும் வாகனங்களை நிறுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையை மீறுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

வாகனங்களை ஒதுக்குப்புறமான இடங்களில் நிறுத்திவிட்டு வர்த்தக நிலையங்களுக்குச் செல்லுமாறு மக்களைப் படையினர் கேட்டுள்ளனர்.

வடமராட்சியில் இடம்பெற்றுவரும் கிளைமோர் தாக்குதல்களை அடுத்தே இந்த நடைமுறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-203-70)

## மீனவக் குடும்பங்களுக்கு உலர் உணவு விநியோகம்

குடாநாட்டில் கடந்த ஒகஸ்ட் மாதம் முதல் நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையால் வன்னியில் சிக்கியுள்ள மீனவர்களின் குடும்பங்களுக்கு 4 ஆம் கட்டக் காசுக்கான உலர் உணவு இலவசமாகக் கிடைத்துள்ளது.

குறிப்பிட்ட மீனவர்களைக் குடும்பத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள் தற்போது வறுமையில் இருப்பதாக யாழ். பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

'வேல்ட் விஷன்' அமைப்பினருடன் அவர் தொடர்புகொண்டதை அடுத்து அந்த அமைப்பு 4ஆம் கட்டக் காசுக்கான உலர் உணவுப் பொருள்களைத் தான் கொள்வனவு செய்து குறிப்பிட்ட குடும்பங்களுக்கு இலவசமாகக் கொடுத்தது. (1-202)



பத்திரிகையாளர் நிமலராஜனின் நினைவாக வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தினர் யாழ்.புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள சிறார்களுக்கு நேற்றுமுன்தினம் உணவுப்பொதிகளை வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

## தென்மராட்சி கிழக்கு பாடசாலைகளை வேறு இடங்களில் இயக்க அனுமதி

தென்மராட்சி,ஒக்.21

தற்போதைய சூழ்நிலையில் சொந்த இடத்தில் இயங்கமுடியாத தென்மராட்சி கிழக்குப் பிரதேச பாடசாலைகள் வேறு இடங்களில் உள்ள பாடசாலைகளுடன் இணைக்கப்பட்டுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார்.

உசன் இராமநாதன் மகா வித்தியாலம், எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை, போக்கட்டி றோ.க.த.க. பாடசாலை, விடத்தற் பளை கமலாசனி வித்தியாலயம் ஆகியவை மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்துடனும் -

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் மீசாலை நியூமற்ஸ் தனியார் கல்வி நிலையத்திலும் -

கொடிகாமம் அ.த.க. பாடசாலை மீசாலைச் சந்தி ஏசியன் கல்வி நிலையத்திலும் -

மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை, எழுதுமட்டுவாழ் கணேசா வித்தியாலயம் ஆகியவை சாவகச்சேரி இந்து. ஆரம்பப் பாடசாலையுடனும் இணைக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் நடைபெற்று வருவ்தாக்வும் அவர் மேலும் தெரிவித்தார். (202)

## கருத்தரங்கு

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்திவரும் கருத்தரங்குத் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு 'மனிதனின் ஆரோக்கியமான வாழ்வுக்கு வழிகாட்டும் யோகாசனமும் தியானமும்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு இடம்பெறும்.

கருத்துரையை யாழ்.போதனா வைத்தியசாலை உளவளத் துணையாளர் நா.நவராஜ் நிகழ்த்துவார். (202-79)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கலந்துரையாடல்

தென்மராட்சி,ஒக்.21

தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா கேட்டுள்ளார். (202)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.21

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

முன்பள்ளி முதன்மை ஆசிரியர், உதவி ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பிரதேச சபைச் செயலாளர் சி.வே.குலநாயகம் கேட்டுள்ளார். (202)

## தீவுப் பகுதி மீனவர்களுக்கு மாற்றுத் தொழில் வழங்க ஏற்பாடு

நல்லூர்,ஒக்.21

தீவுப் பகுதிகளைச் சேர்ந்த - கடற்றொழிலை மேற்கொள்ள முடியாத நிலையிலுள்ள - மீனவர்களுக்கு மாற்றுத் தொழில் வழங்க கடற்றொழில் திணைக்களம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

மேற்படி மீனவர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாதுள்ளனர். இவர்களை குளங்கள், சிறிய வீதிகள் போன்றவற்றின் புனரமைப்புப் பொது வேலைத் திட்டங்களில் ஈடுபடுத்தி அவர்களின் ஜீவனோபாயத்திற்கு வழி ஏற்படுத்திக் கொடுப்பதற்கான செயற்பாட்டை திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது. (202-111)

## தென்மராட்சி மாணவர்களின் காலை உணவு: பொருள்களை வழங்க யாழ்.செயலகம் ஏற்பாடு

தென்மராட்சி,ஒக்.21

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கு காலை உணவு வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை யாழ். செயலகம் மேற்கொண்டுள்ளது.

காலை உணவு வழங்குவதற்குரிய பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளைகள் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, காலை உணவுக்கான பொருள்கள் வழங்கப்பட்டாலும் தேங்காய், மரக்கறி போன்றவற்றின் விலை அதிகரிப்பினால் மாணவர்களுக்கு காலை உணவு வழங்குவதற்கு சிரமங்கள் ஏற்படும் எனக் கூறப்படுகின்றது. (202)

## பங்கீட்டுப் பொருள்கள் நிறை குறைவு என முறைப்பாடு

வடமராட்சி,ஒக்.21

வடமராட்சிப் பிரதேசத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் பங்கீட்டுப் பொருள்களின் நிறை குறைவாக இருப்பதாக நுகர்வோர் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்

குறிப்பாக அரிசி, மா, சீனி போன்ற பொருள்களில் 1/4 கிலோவுக்கு மேல் நிறை குறைவாகவே கிளைச் சங்கங்களால் நுகர்வோருக்கு வழங்கப்படுவதாக நுகர்வோர் கூறுகின்றனர்.

இதுகுறித்து சில நுகர்வோர்கள் குறிப்பிட்ட சங்கங்களுக்கு முறைப்பாடு செய்துள்ளனர். (173)

## இரண்டாவது தடவையாகவும் இடிந்த நரியன் குண்டுக் குளத்தின் சுவர்கள்!

யாழ்ப்பாணம்,ஒக்.21

யாழ்ப்பாணம் மாநகர சபையினால் இரண்டாவது தடவையாகவும் நிர்மாணிக்கப்பட்ட கலட்டி நரியன் குண்டுக் குளத்தின் சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ளன.

கடந்த ஆண்டும் குறிப்பிட்ட குளத்தின் சுவர்கள் இடிந்து வீழ்ந்தன. அதனைத் தொடர்ந்து இரண்டாவது தடவையாகவும் குளக்கட்டின் சுவர் கட்டப்பட்டது. இப்போது, மீண்டும் கட்டப்பட்ட சுவரும் இடிந்து வீழ்ந்துள்ளது.

பொதுமக்களின் பணமே குளத்தின் சுவர்களைக் கட்டுவதற்குச் செலவிடப்படுகிறது. இரண்டு தடவைகள் குளத்தின் சுவர்கள் இடிந்து வீழ்ந்தமைக்கு கட்டட வேலைகளை மேற்பார்வை செய்த உத்தியோகத்தர்களே பதில் சொல்ல வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கிறார்கள். (202-68-79)

## செயலமர்வு

தென்மராட்சி,ஒக்.21

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான 'வள இயல்பை விருத்தி செய்தல்' தொடர்பான செயலமர்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அனைத்து அதிபர்களையும் செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (202)

## நாளுக்கு நாள் அதிகரிக்கும் நுளம்புத்திரிகளின் விலை

கல்வியங்காடு,ஒக்.21

யாழ்.குடாநாட்டில் நுளம்புத்திரிகளின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதுடன் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

தற்போது பருவ மழை பெய்ய ஆரம்பித்ததையடுத்து நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் நுளம்புத் திரிகளைப் பெறுவதில் மக்கள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

இதனையடுத்து வர்த்தக நிலையங்களும் கிராமப்புறப் பெட்டிக் கடைகளும் நுளம்புத் திரிகளை அதிகரித்த விலைகளில் விற்கின்றன. நாளுக்கு நாள் விலையை அதிகரிப்பதில் வியாபாரிகளும் தீவிரம் காட்டி வருகின்றனர்.

நுளம்புகளின் பெருக்கத்தால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் உள்ளதால் நுளம்புத் திரிகளை நியாய விலையில் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுகின்றனர். (202-79-51)

### நாளை

ஐப்பசி 05
ஞாயிற்றுக்கிழமை
22.10.2006
திதி : அமாவாசை
முற்பகல் : 10.47
நட்சத்திரம் : சித்திரை
பிற்பகல் : 03.16
ஸ்கந்தஷஷ்டி விரதாரம்பம்
சுபநேரம் : 09.02 - 10.32
ராகுகாலம் : 04.32 - 06.02

## தென்மராட்சி வலயத்தில் தவணைப் பரீட்சை நாளைமறுதினம்

தென்மராட்சி,ஒக்.21

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் இரண்டாம் தவணைப் பரீட்சைகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகி 3 தினங்கள் நடைபெறவுள்ளது.

தரம் ஒன்று தொடக்கம் தரம் 9 வரையான வகுப்பு மாணவர்களுக்கு பரீட்சைகள் குறித்த தினத்தில் நடத்தப்படவுள்ளதாகவும் -

ஏனைய வகுப்பு மாணவர்களுக்கான பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் குறித்த பின்னர் அறிவிக்கப்படுமெனவும் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**COMPUTERIZED ACCOUNTING**

Speed Batch Only 30 Hours

- Start on :- 22.10.2006
- Days :- Sat, Sun
- Time :- 12.00 pm
- Only For 10 Students
- கணக்கியல் அறிவில்லாதவர்களும் இணைந்து பயிற்சி பெற முடியும்.

பயிற்சிகள் யாவும் Qualified & Experienced Lecturers மற்றும் Banking Professionals ஆல் நடத்தப்படும்

Fee: 2000/=

**C.B Computer Academy**
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

## கட்டாக்காலி மாடுகளால் நெற்செய்கை பாதிப்பு

வடமராட்சி,ஒக்.21

கட்டாக்காலி மாடுகளின் தொல்லையால் கரவெட்டி அத்துளுப் பிரதேசத்தில் நெற்செய்கை பாதிக்கப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தல் நெல் விதைப்பு முடிவடைந்து முறைகள் வரஆரம்பித்துள்ளன. இந்நிலையில் கட்டாக்கலி நிலத்தை மிதி பலகையுடன் முளைகளை மேய்ந்து வருகின்றது. இதனால் நெற்செய்கை பாதிக்கப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (202)

### தவறிவிட்டது

சந்திரகுமார் மாலினி என்பவருடைய தே.அ.அட்டை (575853382V). விசேட அடையாள அட்டை என்பன (221/5, கண்டிவீதி, 3ஆம் ஒழுங்கை, அரியாலை எனும் முகவரியுடையது.) யாழ்.சம்பந்தர் வைத்திய நிலையத்திற்கும் யாழ்.பஸ் நிலையத்திற்குமிடையே தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் அ.சந்திரகுமார், தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

### தவறிவிட்டது

அற்புதராசா ... நபாகரன் என்பவருடைய மோட்டார் சைக்கிள் பின் இலக்கத்தகடு (NPHO 8151 கொண்ட) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 430, கண்டி வீதி, அரியாலை எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

### தவறிவிட்டது

நகுலேஸ்வரன் புவனமாதேவி என்பவருடைய தே.அ.அட்டை (606351895 V) விசேட அடையாள அட்டை, கைத்தொலைபேசி, அடைவுத்துண்டு (வவுனியா), சமுர்த்தி முத்திரை என்பன அடங்கிய பேர்ஸ் திருநெல்வேலிச் சந்தைக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கோ.கிருபாநந்தன், இல.237, கே.கே.எஸ் வீதி கொக்குவில் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். அல்லது க.நகுலேஸ்வரன், 10ஆம் வட்டாரம், புங்குடுதீவு எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

### பண்டிகைக்கால விசேட சலுகை

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு எமது நிறுவனத்தில் வெளிநாட்டு அழைப்புகள் அனைத்தும் குறைந்த கட்டணத்தில்

| | |
|---|---|
| ஐரோப்பா, கனடா, அமெரிக்கா நாடுகளுக்கு | நிமிடத்திற்கு 5/- |
| இந்தியா | நிமிடத்திற்கு 20/- |
| மலேசியா | நிமிடத்திற்கு 10/- |
| அரபு நாடுகள் | நிமிடத்திற்கு 35/- |

மற்றும் எப்பாகத்திலிருந்தும் எந்த நேரத்திலும் துரித கதியில் பணப்பரிமாற்றம்

WESTERN UNION Money Transfer

**திருமுருகன் கொம் நெற்**
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 7835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
தொ.பே. 222 7310

## இணுவில் கந்தசுவாமி கோயில்
## கந்தசஷ்டி திருவிழா

| | | |
|---|---|---|
| 22.10.2006 | காலை | 8.30 அபிஷேகம் |
| | | 10.30 காப்புக்கட்டுதல் நடைபெறும் |
| | பிற்பகல் | |
| | | 2.00 சாயரட்டைப் பூசை |
| | | 2.45 2ஆம் காலப் பூசை |
| | | 3.00 வசந்த மண்டபப் பூசை |
| | | 4.00 ஆறுமுகப் பெருமான் திருவீதியுலாவருதல் |
| 27.10.2006 | பிற்பகல் | 1.00 சூரன்போர் |
| 28.10.2006 | காலை | 6.00 தீர்த்தோற்சவம் |

**தர்மகர்த்தா சபையினர்.**

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### பட்டப்பின் படிப்புகள் பீடம்

பண்பாட்டியலில் முதுகலைமாணி - 2002/03

**மீள் பரீட்சை - 2006**

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை எதிர்வரும் 03.11.2006 இற்கு முன்னர் பட்டப்பின் படிப்புகள் பீட அலுவலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.

பதிவாளர்
18.10.2006 (சி/51199)

### A/L 2008, 07 & DAY

B.St. - Mr. பசில்
Acc. - Mr. தவா
Eco. - Mr. சுஜீதரன்
Tamil - Mr. சிவா
Log. - Mr.R. நமணன்
Chris. - Mrs. A. மல்லிகா
Geo, Dra, H/C, Eng & Sinhala
Gr. 1 முதல் O/Lவரை

**SHAMROCK** கச்சேரி, யாழ்.

### விற்பனைக்கு

Coker Spaniel 2 மாத வயதுடைய Brown ஆண் நாய்க் குட்டி ஒன்று உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: மனோன் மாஸ்டர், அரசடி, நவாலி தெற்கு, மானிப்பாய். (54544)

### தவறிவிட்டது

சிவயோகம் நடேசன் என்பவரது தேசிய அடையாள அட்டை (507652956V) நல்லூருக்கும் கட்டப்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பொன்னுத்துரை செல்வராசா இல.9, நல்லூர் குறுக்குத்தெரு, நல்லூர். யாழ்ப்பாணம். எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (54541)

### மெதடிஸ்த் பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை
### தரம் 6 இற்கான அனுமதி - 2007

எமது பாடசாலையில் தரம் 6 (2007) இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் பாடசாலையினால் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை பாடசாலை அலுவலகத்தில் பெற்று 30.11.2006 ஆம் திகதிக்கு முன்னர் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

மெதடிஸ்த் பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை. (சி/51192) - அதிபர்.

### G.A.Q. 1st in Commerce
### யாழ்., பேராதனை

2007/08 கல்வியாண்டிற்கான விரிவுரைகள் 28.10.2006இல் ஆரம்பமாகின்றன.
க.பொ.த. உ.தரம் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.
22.10.2006இல் விண்ணப்பப்படிவங்களை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
57/18, ஸ்ரான்லி வீதி, (இலங்கை வங்கிக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

குறிப்பு: எமது கல்லூரியில் ஏற்கனவே கல்வி பயிலும் மாணவர்களின் விரிவுரைகள் யாவும் ஆரம்பமாகிவிட்டன. (54492)

### பிரத்தியேக வகுப்பு
**பௌதிகவியல்**
By:M. சுருணாநிதி B.Sc (Spe)

*2008: Heat* Mon - Thu 6 - 7
*2007: Magnetic field* Wed - Fri 3.30 - 4.30
*2006: Repeat* Sat, Sun 9 - 11

54, கலைமகள் வீதி, அரியாலை.

### தவறிவிட்டது

தென்மராட்சி மட்டுவில் தெற்கைச் சேர்ந்த தர்மேஸ்வரன் பத்மாவதி என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.655514224V), விசேட அடையாள அட்டை (இல. 091049347) என்பன யாழ்ப்பாணம் மின்சார வீதியில் 19.09.2006 தவறிவிட்டது. கண்டவர்கள் எடுத்து யாழ்.ஆஸ்பத்திரி வீதி, குகன் ஸ்ரோஸில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி/51198)

### தவறிவிட்டது

அம்பலவாணர் பரமநாதன் என்பவரது தேசிய அடையாள அட்டை (580630499V) யாழ்.நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.03 NHDA விடுதி, காட்டுக் கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் (T.P.: 222 3742) என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (54550)

### மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் மகேஸ்வரன் (அருண்)
(அருண் ஹாட்வெயர்ஸ் உரிமையாளர்)



அறிவாலயம், கரணவாய் மேற்கைச் சேர்ந்த ஆறுமுகம் மகேஸ்வரன் 17.10.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஆறுமுகம் (சுவிஸ்)-செல்வபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் கிருஸ்ணவேணி, பொபிதா (லண்டன்), காசினி, யாழினி, விஸ்வராஜ் ஆகியோரின் அருமைச் சகோதரரும் செல்வராணியின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.10.2006 புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் பி.ப. ஒரு மணியளவில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அருண் ஹாட்வெயர்ஸ், அறிவாலயம், கரணவாய் மேற்கு, கரவெட்டி. தொ.பே : 0212264512*

தகவல்: குடும்பத்தினர்.

### விழிநீர் வழிய அஞ்சலிகள்



அமரர்
**கந்தையா கனகம்மா**

பதினாறும் பெற்று ஆயிரம் பிறை கண்டு அமரரான தங்கள் பெருவாழ்வு போற்றுதலுக்குரியது. தங்கள் ஆண் செல்வங்கள்அனைவரும் எமது கழகத்தைப் பல்லாற்றும் அணி செய்தனர். தங்கள் தவப் புதல்வன் க.தர்மகுலசிங்கம் அவர்கள் கழகத்தின் இன்றைய உபதலைவர்.

தங்கள் பிரிவால் சோகத்தில் வாழும் அனைவருக்கும் எமது அஞ்சலிகள். தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைஞ்சுகின்றோம்.

*கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.* (54542)
ஜொலி ஸ்ரார் வி.க.
Jollys Stars S.C

### நீச்சல் தடாகம்

**புளூ ஹெவன் நீச்சல் தடாகம்**
70, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.
(சென்.ஜோன்ஸ்கோ பாடசாலைக்கு முன்பாக)
நேரம்: காலை 9.00 - மாலை 5.00 வரை
வியாழன்: 2.00 - 5.00 பெண்குழந்தைகள் மட்டும்.
பயிற்சி வகுப்புகள் தினமும் (54536)

### விற்பனைக்கு

5 HP CHINA எஞ்சின் எம்மிடம் உண்டு

தொடர்பு:
*தொ.பே.:222 5497*
*205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

## கிருஸ்ணசாமி சத்தியேஸ்வரன்



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடாகவும் கொண்ட கிருஸ்ணசாமி சத்தியேஸ்வரன் அவர்கள் 13.10.2006 அன்று ஜேர்மனியில் அகால மரணமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2006) சனிக்கிழமை ஜேர்மனியில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.கிருஸ்ணசாமி (தந்தை)
*நயினாதீவு - 8* (54540) வி.சாமநாதன் ஜே.பி. (மாமன்)

### தவறிவிட்டது

சுதுமலை தெற்கு, மானிப்பாய் எனும் முகவரியைச் சேர்ந்த கந்தையா சரோஜா என்பவரது தேசிய அடையாள அட்டை (655633715 V) விசேட அடையாள அட்டை என்பன 17.10.2006 அன்று யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள்மேற்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (54525)

### 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வீரகத்திப்பிள்ளை இராசசேகரம்**
(உரிமையாளர், வீரகத்திப்பிள்ளை & சன்ஸ் சேகரம் & சன்ஸ்)

மலர்வு 06*03*1908 உதிர்வு 21*10*1999

திதி: 21-10-2006

ஆண்டுகள் ஏழு சென்றிடினும்
ஆறவில்லை எம் இதய வேதனைகள்
ஆறுதல் கூறும் அன்பு நிறை தெய்வமே
இன்று ஆறுதலின்றித் தவிக்கின்றோம்.

*உங்கள் நினைவில் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

தொண்டைமானாறு. (54509) மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### மணமகன் தேவை

யாழ்.கௌரவ, கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த நோர்வேயில் வசிக்கும் அழகிய 23 வயதுடைய மணப் பெண்ணுக்கு மணமகன் தேவை.

தொடர்பு: 004772422214 (54519)

## நாகலிங்கம் அமரசிங்கம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் லண்டனில் வசித்து வந்தவருமாகிய நாகலிங்கம் அமரசிங்கம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-சின்னம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து-இராசம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற தயாநிதியின் அன்புக் கணவரும் கருணானந்தன், ஜீவநிலந்தா, ஜீவானந்தகுமாரி, வசந்குமாரி, உதயகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.10.2006) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.103, புங்கன்குளம் வீதி, அரியாலை.* (54538)
தகவல்: குடும்பத்தினர்.

### காணி விற்பனைக்கு

யாழ்.திருநெல்வேலிச் சந்திக்கும் முடமாவடிச் சந்திக்கும் இடையில் கேணியடிக்கு அருகில் றோட்டுக் கரையில் உள்ள கிணறு உட்பட 7 1/2 பரப்புத் தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.

விபரங்களுக்கு:
தொ.பே: 077 6687524
(சி/51154)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# தீபத் திருநாளன்று திடசங்கற்பம் செய்வோம்

இன்று தீபாவளித் திருநாள். தீபத் திருநாள்.

இருளகன்று ஒளி நிறைந்த - நிலைத்த - நன்னாள்.

உலகின் மூலமும், முதலும் கதிரவன். அவனின் ஒளிதான் உலகில் சக்தியாகப் பதிக்கப் பெற்று உலக இயக்கத்துக்கே காரணமாகின்றது. அவனால்தான் உயிர்கள் பிறக்கின்றன; விழிக்கின்றன; சீவிக்கின்றன; பிழைக்கின்றன; அழிகின்றன. அவனின் ஒளியில்தான் உலகமே சிறக்கின்றது.

அந்த ஒளியைப் போற்றுகின்ற திருநாளும் கூட இன்று.

உலகைக் கவ்விய அதர்ம இருள் அழிக்கப்பட்டு, தர்ம ஒளி நிலை நிறுத்தப்பட்ட நாளாகவும் சிறப்பிக்கப்படுகின்றது தீபாவளி.

தர்மத்தை நிலைநிறுத்த அதர்மம் சங்காரம் செய்யப்பட்டதை அறிவுறுத்தும் பல்வேறு கர்ண பரம்பரைக் கதைகளும், ஐதீக புராணங்களும் இந்துக்கள் மத்தியில் உள்ளன. விஜயதசமி, தீபாவளி, கந்தசஷ்டி என்பன அந்த வகையில் அடங்கக்கூடியன.

''தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்; தர்மம் ஒரு நாள் வெல்லும்'' என்பது ஆன்றோர் வாக்கு. அந்த உயரிய உபதேசத்தை உணர்த்தும் நாளாக - கொடுங்கோலன் நரகாசுரனை மகாவிஷ்ணு தமது சக்கராயுதத்தால் வதைத்த நன்னாளாக - இந்தத் தீபத் திருநாள் அமைகின்றது.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை இன்று அவர்களும் பேரினவாத நரகாசுரனின் பிடியில் சிக்கித் தவிக்கின்றார்கள். அடிமைப்பட்டு அல்லலுறுகின்றார்கள்.

போர் மேகம் சூழ்ந்துள்ளதால் அவர்கள் வாழ்வில் இருள் கவிந்துள்ளது. அமைதிப் பேச்சு எனும் நம்பிக்கைக் கீற்று எங்கோ ஒரு மூலையில் பளிச்சிட்டாலும் அது நிலைத்து நீடிக்கும் அறிகுறிகள் இல்லை. கொடும் போர் என்ற பேரிருள் எப்போது முழுமையாக ஆட்கொள்ளும் (ஆட்கொல்லும்) என்று தெரியாது அந்தரிக்கும் இக்கட்டில் சிக்கித் தவிக்கின்றார்கள் ஈழத் தமிழர்கள்.

பேரினவாத நரகாசுரனின் பிடியிலிருந்து விடுபட்டு நியாயம் எனும் சுதந்திர வாழ்வை எட்டுவதற்குப் போராடிக்கொண்டிருக்கின்றார்கள் ஈழத் தமிழ் மக்கள்.

அடிப்படை உரிமைகளை இழந்து, கௌரவமும், நீதியும், சமத்துவமும் கொண்ட வாழ்வைத் தொலைத்து, சுதந்திரத்தையும், சுயாதிபத்தியத்தையும் அந்நியரிடம் பறிகொடுத்து, தமது தாயகத்தின் தனித்துவத்தை ஆக்கிரமிப்புக்குப் பலிகொடுத்து, வாழ்வியலுக்கும், இருப்புக்குமான விழுமியங்கள் விலை பேசப்பட்ட நிலையில் அந்தரிக்கின்றது தமிழினம்.

தமிழர் தாயகத்தில் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து அல்லலுறும் தமிழர்கள் அனுபவிக்கும் சித்திரவதைகள் - கஷ்டங்கள் - நரகாசுரனின் கொடுமையை விட விஞ்சியவை எனலாம்.

எனவே, இன்றைய தீபாவளித் திருநாளை 'கொண்டாடும்' மனநிலையில் அவர்கள் இல்லை. 'அனுஷ்டிக்கும்' அவ(ல) நிலையிலேயே அவர்கள் இருக்கின்றார்கள்.

தமிழ்ப் பேசும் மக்களில் கணிசமானோர் தம்மை ஒறுத்து நோன்பும், விரதமும் அனுஷ்டிக்கும் காலத்தை ஒட்டியே தீபாவளித் திருநாள் வருகின்றது.

முஸ்லிம் சகோதரர்கள் இறைவன் நாமத்தால் புனித நோன்பு நோற்கும் காலம் இதுதான்.

அதுபோல, இந்துக்கள் கேதார கௌரி விரதமும், கந்தசஷ்டி விரதமும் இருக்கும் வேளையும் இதுவே.

அதாவது, தமிழ் பேசும் மக்கள் தங்களை ஒறுத்து, வருத்தி, இறைவனைத் துதிக்கும் காலம் இவை.

ஈழத் தமிழினமும் அவ்வாறே தன்னை ஒறுத்து, கஷ்டங்களை - பாடுகளை - சுமந்து, சுயத்தை வருத்தி, சுயதரிசனம் செய்கின்ற காலகட்டம் இது.

இப்போது கவிந்திருக்கும் பேரிருளும், போரிருளும் அகன்று சமாதானச் சூரியன் உதித்து, சுடர்விட்டுப் பிரகாசித்து மேலெழுந்து, அமைதி ஒளிபரப்புவான் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கின்றது. தமிழினம்.

அத்தகைய ஒளி பிறக்கும் நன்னாளை - விடுதலைத் தினத்தை - எதிர்கொள்வதற்கு ஆயத்தமாக நமது சமூகத்தை நாமே தயார்படுத்திக்கொள்வதும் அவசியமாகின்றது.

அந்நிய இனத்தின் நரகாசுரப் பிடியிலிருந்து விடுதலை பெறுகின்ற சுதந்திரத்தை வேண்டி நிற்கும் நமது இனம், தனது இனத்துக்குள்ளேயே பல்வேறு கொடுமைகளுக்குக் காலாகி நிற்கும் அசுரர்களைத் தொலைக்க வேண்டிய கட்டாயத்திலும் இருக்கின்றது.

சாதிய ஒடுக்குமுறை, வர்த்தக - வர்க்கச் சுரண்டல்கள், பரோபகார மறுப்பு, முதலாளிப் போக்கு போன்ற இன்னோரன்ன அசுரத்தனங்கள் நம்மத்தியில் ஊடுருவி, நிலைகொண்டு நிற்கின்றன.

இந்த அனர்த்தங்களைக் களைந்து, சமத்துவ இனவாழ்வுக்கான அடிப்படைகளை நம்மத்தியில் நாம் உருவாக்கிக் கொண்டால்தான், பேரினவாத நரகாசுரனின் பிடியிலிருந்து மீளும் தகுதியை நாம் பெற்றவர்களாவோம். அவ்வாறு நம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ள இந்தத் தீபாவளித் திருநாளில் பிரதிக்ஞை -திடசங்கற்பம் - செய்துகொள்வோமாக!

# தீய எண்ணங்களை ஒழிக்கும் தீபாவளி

நல்ல எண்ணங்களாக உள்ள மனிதனின் மனதில் ஒரு தீய எண்ணம் வந்தாலும், அந்த மனிதனின் நல்ல தன்மை மங்கிப் போய்விடும். அத்தகைய தீய எண்ணங்களை ஒழிக்கும் தீப ஒளி நாளாக தீபாவளி நாள் விளங்குகிறது.

மலைகளில் சிறிய மலையும் உண்டு. பெரிய மலையும் உண்டு. சிறிய மலையாயிருந்தாலும் பெரிய மலையாயிருந்தாலும் மலை பசுமையாக இருந்தால் மழை செழுமையாக இருக்கும். அதுபோலவே மனிதரிலும் வசதியில் சிறியவரும் உண்டு. பெரியவரும் உண்டு. அதில் வித்தியாசம் பாராமல், தீபாவளி என்றால் தன்னுடைய பண்டிகை, தனக்கேற்ற பண்டிகை, தகுதிக்கேற்ற கொண்டாட்டம் என்று வாழ்வதுபோல, தர்மம் என்பதையும் தனது தகுதிக்கு ஏற்ற அளவு சிறியதோ, பெரியதோ அதை மனமுவந்து செய்ய வேண்டும்.

ஆகவே ஒவ்வொரு மனிதனும் நல்ல குணங்களோடும் நற்பண்புகளோடும் நல்ல காரியங்களையும் செய்து வந்தார்களானால் பகவானுடைய அனுக்கிரகத்தினால் எல்லா நன்மைகளும் கிடைக்கும்.

தீபாவளி நன்னாளில் ஞானோபதேசம் செய்த கிருஷ்ண பரமாத்மாவை தியானித்து, பூஜித்து நல்லதைப் பெறுவதற்கு எல்லோரும் மனங்கொள்வது அவசியமானதாகும்.

- சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர்.

# நிர்க்கதியாகி நிற்கும் மக்களின் வேதனை நீங்கப் பிரார்த்தியுங்கள்

## நல்லை ஆதீன முதல்வர் செய்தி



வயிற்றுப் பசியோடும், வாடிய முகத்தோடும், பல உறவுகளைத் தொலைத்தும் நிர்க்கதியாகி நிற்கும் மக்களுக்கு இறைவன் திருவருளால் அவர்களது வேதனைகள் நீங்கி ஆறுதல் கிடைக்க, அனைவரும் அமைதியான பிரார்த்தனையில் ஈடுபடுங்கள்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் தமது தீபாவளிச் செய்தியில் மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

அவரது செய்தி வருமாறு:-

இந்துக்களின் இனிய விழாக்களில் ஒன்றாகிய தீபத் திருநாள் இன்றைய நாள். இருள் நீங்கி ஒளிவேண்டிப் பிரார்த்திக்கின்ற இந்த உன்னதநாளில் அனைவருக்கும் நல்வாழ்வு கிடைக்க எல்லாம் வல்ல பரம்பொருளை பிரார்த்திப்போமாக.


நரகாசுரனின் கொடிய துன்பத்தினால் வேதனைப்பட்ட மக்கள் விடிவுபெற்ற நாள் இன்றையநாள். இன்றைய நாளில் மிகுந்த வேதனையோடு வாழும் எம்மக்களின் துயர் விரைவில் நீங்கி, துன்பம் இல்லாத இன்பவாழ்வு கிடைக்க வேண்டும் என்று அனைவரும் ஒன்றுபட்டுப் பிரார்த்தனை செய்யவோம்.

வயிற்றுப் பசியோடும், வாடிய முகத்தோடும் பல உறவுகளைத் தொலைத்தும் நிர்க்கதியாகி நிற்கும் மக்களுக்கு இந்நாளில் இறைவனுடைய திருவருளால் அவர்களது வேதனைகள் நீங்கி, ஆறுதல்கள் கிடைக்க அனைவரும் அமைதியான பிரார்த்தனையில் ஈடுபடுங்கள்.

இம்முறை தீபாவளி நாளை அடக்கமாக, அமைதியாக பிரார்த்தனை செய்யும் நாளாகக் கருதிக் கொண்டு அன்பினால், பண்பினால் அனைவரும் இன்புற்று வாழ இறையருளை நீள நினைந்து நல்லாசி கூறி அமைகின்றேன்

''என்றும் வேண்டும் இன்ப அன்பு'' [அ]

# அமெரிக்க ஜனாதிபதி தீபாவளி நல்வாழ்த்து



தீபாவளித் திருநாளை முன்னிட்டு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ், அமெரிக்கா உட்பட உலகமெங்கும் வாழும் இந்து மக்களுக்குத் தமது அன்பு கலந்த நல்வாழ்த்துச் செய்திகளைத் தெரிவித்திருக்கிறார்.

வாஷிங்டன், வெள்ளை மாளிகையிலிருந்து அவர் விடுத்திருக்கும் அந்தத் தீபத்திருநாள்வாழ்த்துச்செய்தி வருமாறு:-

''தீபத் திருநாளாகிய தீபாவளியைக் கொண்டாடும் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு வருடமும் தீபத்திருநாளில், இந்துக்கள் அனைவரும் தமக்குக் கடந்த காலத்தில் கிடைத்த அனுக்கிரகங்களை நினைந்து கொண்டாடுவதுடன் தமது எதிர்காலமும் ஒளிமயமாகவும், சுபீட்சமாகவும் இருக்க வேண்டும் என்றும் வேண்டுதல் செய்வர்.

இந்தத் தீபத் திருநாள் கொண்டாட்டம் இந்து மதத்தின் செழுமையான வரலாற்றையும், பாரம்பரியத்தையும் எடுத்துக்காட்டுவனவாய் விளங்குகின்றது. உற்றார், உறவினர்கள், நண்பர்கள் எல்லோரும் ஒன்றுகூடி அன்பு மயமாய் ஆனந்தித்துக் கொண்டாடும் பாரம்பரியத்தைக் கொண்டதாகவும் இந்தத் திருநாள் விளங்குகின்றது.

இந்தத் திருநாள் உலக மக்கள் அனைவரையும் நல்லெண்ணத்தின் பெயரால் ஒன்றிணைத்தும் வைக்கிறது. அத்தோடு, எமது திருநாட்டைச் செழுமைப்படுத்தும் பல்வேறு கலாசாரங்களையும் நினைவூட்டியும் வைக்கிறது.

இந்தத் தீபத் திருநாளில் உங்களுக்கு மகிழ்ச்சியும், ஆனந்தமும் கிட்ட வேண்டுமென்று லோறாவும், நானும் எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.''

# மக்கள் விரும்பித் தேடும் அமைதி உருவாகட்டும்

## யாழ். ஆயர் தீபாவளிச் செய்தி



மக்கள் விரும்பித் தேடுகின்ற அமைதியின் அரசு உருவாக .இந்த நல்ல நாளிலே இறையாசீர் வேண்டுகிறோம்.

யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் விடுத்துள்ள தீபாவளிச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.


ஆயரின் தீபாவளிச் செய்தி வருமாறு:

எமது இந்துமத சகோதரர்கள் கொண்டாடும் தீபாவளிப் பண்டிகையானது மற்றெல்லாப் பண்டிகைகளையும் விட மிக மகிழ்வோடு எல்லோராலும் கொண்டாடப்படுகின்ற ஒரு பண்டிகை என்ற சிறப்பைப் பெறுகின்றது. எந்த ஒரு மதத் திருவிழாவும் வெளிப்படையான விதத்தில் பல நிகழ்வுகளைக் கொண்டிருந்தாலும் உள்ளார்ந்த ரீதியாக மனிதனை ஓர் உயர்ந்த ஆன்மீக அனுபவத்திற்கு அழைத்துச் செல்கின்றது. இந்த வகையில் ஒளியின் திருநாள் என்று அர்த்தம் பெறும் தீபாவளித் திருநாள் விளம்பி நிற்கும் ஆன்மீக அனுபவங்கள் நாம் வாழும் இக்கால கட்டத்தில் குறிப்பான அர்த்தமுடையவையாக இருக்கின்றன.

இன்று நம்மைச் சூழ்ந்துள்ள தீமையின் ஆதிக்கம் அழிந்து மக்கள் விரும்பித்தேடுகின்ற அமைதியின் அரசு உருவாக இந்த நல்ல நாளிலே இறையாசீர் வேண்டுவதோடு, அனைவருக்கும் மகிழ்ச்சியான தீபாவளி நல் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம் - என்பதாகும். [அ]

# பழிவாங்கும் குரோத உணர்ச்சிகளை துடைத்தெறிய திடம்கொள்வோம்!

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு



இனம், மதம் மற்றும் வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு பழிவாங்கும் உணர்ச்சி, குரோதம் என்பவற்றை மனித இனத்திலிருந்து முற்றாகத் துடைத்தெறிவதற்கு இன்றைய தீபாவளி தினத்தில் திடசங்கற்பம் எடுப்போம்.

இப்படித் தமது தீபாவளித் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஜனாதிபதி நேற்று விடுத்த தீபாவளிச் செய்தி வருமாறு:-

''இன்னல் நீங்கி இன்பம் பிறக்கும் தீபத்திருநாளாம் இத்தீபாவளித் திருநாளில் அனைத்து இந்துப் பெருமக்களுக்கும் எனது உளங் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரும் உவகை அடைகிறேன்.

பல்வேறு இனங்கள் மற்றும் மதங்களைப் பின்பற்றும் மக்கள் வாழும் எமது நாட்டில் ஒவ்வோர் இனமும் தத்தமக்கே உரித்தான மதம், காலாசாரம், மரபுகள், விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்தபடி வாழ்ந்து கொண்டிருப்பது உலகுக்கே நல்லதோர் முன்மாதிரியாகும். அந்த வகையில் பௌத்த மதமும், இந்து மதமம் இந்நாட்டில் பின்பற்றப்படும் தொன்மை வாய்ந்த மதங்களாகும். இம்முறை தீபாவளிப் பண்டிகையும் கூட குறித்த சகவாழ்வை மென்மேலும் பலப்படுத்த ஏதுவாக அமையும் என்று நான் கருதுகிறேன்.

தீபாவளிப் பண்டிகையானது அதர்மத்தை ஒழித்து தர்மம் நிலைநாட்டப்பட்டதைப் பிரதிபலித்துக் காட்டுகின்றது. அதர்மம் எனும்போது அயலவரின் இனம், மதம் அல்லது வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு பழிவாங்கும் உணர்ச்சி, குரோதம் என்பவற்றைப் பரப்புவதாகும். அவ்வாறான உணர்வுகளை மனித இனத்தினர் இடத்திலிருந்து முழுமையாகத் துடைத்தெறிவதற்கு இன்றைய தினத்தில் தீப ஒளியேற்றப்படும் தருணங்களில் நாம் திடசங்கற்பம் பூணுவோம்.

மேலும் நம்மனைவரினதும் எதிர்பார்ப்பான நாட்டின் சமாதானம் மலர இந்நன்னாளில் மனதாரப் பிரார்த்திப்போம்.''

# விமோசனமும் நிம்மதியும் வேண்டிப் பிரார்த்திப்போம்

## இந்துமா மன்றம் தீபாவளிச் செய்தி

இன்றைய தீபாவளித் திருநாள் துன்ப துயரங்களுக்கும் வேதனைகளுக்கும் மத்தியில் உதயமாகிறது.

ஆகையால், விழாக்கள் கேளிக்கைகளில் ஈடுபடாமல் விமோசனமும் நிம்மதியும் வேண்டி இறைவனைப் பிரார்த்திப்பதோடு - மனித நேய சமூகப்பணிகளுக்கு ஆதரவையும் வழங்கும் புண்ணிய கைங்கரியத்தைச் செய்யுங்கள்.

இவ்வாறு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவரும், செயலாளரும் விடுத்துள்ள தீபாவளிச் செய்தியில் கேட்டுள்ளனர்.

[illegible] குறிப்பிடப்பட்டிருப்பதாவது:- இந்து மத்தினரின் முக்கியத்தவம் வாய்ந்த பண்டிகைகளுள் ஒன்றாக அமையும் தீபாவளி, வாழ்வின் பாவ இருளை அகற்றி தீப ஒளியை வழங்கும் திருநாளாகும். ஆனால் இன்றைய காலகட்டத்தில் நம்நாட்டின் பெரும்பாலான தமிழ் மக்களது துன்ப துயரங்களுக்கும் வேதனைகளுக்கும் மத்தியில் உதயமாகும் தீபாவளித் திருநாள், எந்தவகையிலும் அவர்களுக்கு குதூகலத்தை அளிக்க முடியாது.

கடந்த சில வருடங்களாக நிலவிவந்த அமைதிச் சூழ்நிலை முற்றாகவே தளர்ந்துள்ள நிலையில், எமது மக்கள் மீண்டும் இன்னல்களுக்கும், நிம்மதியின்மைக்கும் ஆளாகிவிட்டார்கள் என்பது வேதனைக்குரியது. இந்த வகையில் கேளிக்கைகள், விழாக்களுடன், தீபாவளி திருநாளைக் கொண்டாடுவதும், பரஸ்பரம் வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொள்வதும் எவ்வகையிலும் பொருந்தாது - என்று உள்ளது. [அ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ராஜாங்க இணைச்செயலர் திருமலை நிலை குறித்து நேற்று ஆராய்வு

திருகோணமலை, ஒக்.21

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க ராஜாங்க இணைச்செயலர் றிச்சாட் பௌச்சர், நேற்றுத் திருகோணமலைக்குச் சென்று அங்குள்ள நிலைமை களை ஆராய்ந்தார்.

திருகோணமலை அரச அதிபர் ரி.ஆர்.டி.சில்வாவை முதலில் சந்தித்த அவர் திருமலையின் நிலைமை, அபிவிருத்திப் பணிகள் ஆகியன தொடர்பாகக் கலந்துரையாடினார்.

அதைத்தொடர்ந்து 22ஆவது படைத்தள கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மென்தக சமரசிங்கவுடன் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக அவர் அராய்ந்தார்.

அதன்பின் அங்கு பணியாற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடி அவர்களின் பாதுகாப்புத் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

நகராட்சி மன்ற முதல்வர் கே.முகுந்தனைச் சந்தித்த அவர், நகர சபையின் செயற்பாடுகள், அபிவிருத்திப் பணிகள் ஆகியன தொடர்பாகக் கேட்டறிந்தார். (1-151)

# காணாமற்போன ஓட்டோ சாரதி காயங்களுடன் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.21

சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் காணாமற்போன ஓட்டோ சாரதி காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளார் என மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தையா காண்டீபன் (வயது 26) என்ற ஓட்டோ சாரதி காணாமற்போயுள்ளார் என அவரது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாடு குறித்து விசாரணை மேற்கொண்ட மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் பிரஸ்தாப நபரை மீட்டு சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். சாவகச்சேரி நீதிவானின் உத்தரவின் பேரில் யாழ். சிறைச்சாலையில் அவர் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

காணாமற் போயிருந்த காண்டீபனின் ஓட்டோவைச் சிலர் வாடகைக்கு அமர்த்திச் சென்றனர். ஓட்டோ சரசாலை-பருத்தித்துறை வீதியில் கைவிடப்பட்டிருந்ததும் சாரதியின் நிலை குறித்து எதுவும் தெரியாதிருந்ததும் வாசகர்கள் அறிந்தவையே. (அ-1)

# புலிகள் வசமுள்ள 3 சிப்பாய்களை விடுவிக்க செஞ்சிலுவைக் குழு முயற்சி

கொழும்பு, ஒக்.21

தமிழீழ விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் படைச் சிப்பாய்கள் மூவரை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கோரியுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற மோதல்களில் இந்தச் சிப்பாய்கள் விடுதலைப் புலிகளிடம் உயிருடன் பிடிபட்டிருக்கின்றனர்.

கடந்த ஒக்ரோபர் 6, 11, 14 ஆகிய திகதிகளில் வாகரை, மாங்கேணி, முகமாலை ஆகிய பகுதிகளில் வைத்து இந்த மூன்று படையினரும் விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுவிக்க அரசு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து இது தொடர்பாக செஞ்சிலுவைக் குழு ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு, படையினரை விடுவிக்க முயற்சிகளை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## காணாமற் போனோர் குறித்த முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.21

கந்தர்மடத்தைச் சேர்ந்த இருவரைக் காணவில்லை என்று அவர்களது உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கந்தர்மடத்தைச் சேர்ந்த மோகனதாஸ் கண்ணதாஸ் (வயது29), ராஜாஜி தவராஜ் ஆகியோர் தொடர்பாகவே முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நுணாவிலில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்று திரும்பிய அவர்கள் செம்மணியில் வைத்துக் காணாமற் போயுள்ளனர் என அவர்களது உறவினர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். (1)

## பல்கலை. அனுமதி விண்ணப்ப படிவம் இன்று விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக்.21

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கும் படிவங்கள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

இந்தப்படிவங்கள் இன்று காலை 8மணி முதல் தமது கடையில் வைத்து விநியோகிக்கப்படும் என்று படிவங்களின் யாழ். விநியோக முகவரான பூபாலசிங்கம் புத்தக சாலை நிறுவனத்தினர் உதயனுக்குத் தெரிவித்தனர். (அ-1)

# கிழக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்தக் கோருகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஒக். 21

வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பு சட்டவிரோதமானது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதையடுத்து கிழக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையாளர் முன்வரவேண்டும்.

அரசும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இல்லாதவொரு வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு வரவு - செலவுத்திட்டம் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு - ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாவின் போது கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், 1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் வடக்கு - கிழக்கு தமிழ்பேசும் தாயகம் என ஏற்றுக்கொள்ளப்பட்டு இவை ஒன்றிணைக்கப்பட்டன.

வடக்கு - கிழக்கில் உள்ள பிரிவினைவாதிகளின் ஆயுதங்கள்களையப்படவேண்டும். வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டு ஒரு வருடத்திற்குள் இது தொடர்ந்தும் இணைந்திருக்க வேண்டுமா இல்லையா என்று கிழக்கு மாகாண மக்களின் கருத்துப் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில்தான் இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் இவ்விணைப்பு ஏற்படுத்தப்பட்டது.

இதில் எதுவும் நடைபெறவில்லை. பிரிவினைவாதிகளின் ஆயுதங்களைக் களையவோ அல்லது கிழக்கு மக்களின் கருத்துக்களைப் பெறவோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஆகவே, கிழக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான முழு ஒத்துழைப்பையும் அரசு தேர்தல் ஆணையாளருக்கு வழங்கவேண்டும் - என்றார். (ஐ)

**மீண்டும் தலைநகரில் தமிழர்கள் கடத்திக் கொல்லப்படும் சம்பவங்கள்:**

# பிலியந்தலையில் மீட்ட சடலங்கள் தமிழ்த் தம்பதியருடையவை மற்றொரு இளைஞரும் கொலை! மூவரைக் காணவில்லை!!

கொழும்பு, ஒக்.21

தலைநகர் கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் தமிழர்கள் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்படும் சம்பவங்கள் மீண்டும் இடம்பெற்றிருக்கின்றன. கடந்த இரு தினங்களில் மூவர் கடத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர். மற்றும் மூவர் கடத்தப்பட்ட பின் காணாமற் போயிருக்கின்றார்கள்.

பிலியந்தலை - குடாமாதுவ பகுதியில் பாலம் ஒன்றுக்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்ட சடலங்கள் கொட்டாவ - மத்தேகொட பகுதியைச் சேர்ந்த இளம் தமிழ்த் தம்பதியருடையவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த இளம்தம்பதியர் இருவரும் மத்தேகொட பகுதியில் வசிப்பவர்கள் என்றும் நேற்று முன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் இருவரும் அவர்களது வீட்டில் இருந்து கடத்திச் செல்லப்பட்டிருந்தனர் என்று முறையிடப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

டேவிற் விக்கினேஸ்வரன், அவரது மனைவியான திருக்கேதீஸ்வரி ஆகிய இருவருமே கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர். இவர்கள் இருவரது சடலங்களும் தலையில் சூட்டுக் காயங்களுடன் நேற்றுமுன்தினம் காலை பிலியந்தலை - குடாமாதுவ பகுதியில் வீசப்பட்டிருந்தன.

இச்சம்பவம் பற்றி அறிந்த மக்கள் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள், உடனடியாகப் பிலியந்தலை மற்றும் கொட்டாவ பகுதிகளுக்கு விரைந்து சென்று விசாரணைகளை நடத்தியிருந்தனர். இந்த விசாரணைகளின் பின்னரே கொல்லப்பட்ட இருவரும் தமிழர்கள் என்பது தெரிய வந்திருக்கிறது.

இவர்கள் ஏன் கடத்தப்பட்டார்கள், கடத்தியவர்கள் யார் என்ற விவரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை.

இதேவேளை -

மட்டக்குளிப் பகுதியில் கடத்தப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில் ராகமைப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மொறட்டுவையில் தமிழ் வர்த்தகர் ஒருவர் காணாமற் போயுள்ளார்.

---

## வடக்கு - கிழக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளன. இதனால் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் உண்ண உணவின்றி மர நிழல்களில் தவிக்கின்றனர். இதற்காகவே நாங்கள் கடந்த இரு நாடாளுமன்ற அமர்வுகளின் போது அமைதியாக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டோம்.

ஒக்டோபர் 16ஆம் திகதி வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டது செல்லாது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இது இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளைப் பாதிக்கும். வடக்கு - கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைக்கும்படி கோரியே நாம் கடந்த 17, 18ஆம் திகதிகளில் சபையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு சபை நிகழ்வுகளை முடக்கினோம். இந்த நிலையில் அமைச்சர்கள் சிலர் எம்மிடம் உங்கள் கோரிக்கையை முன்வைத்தால் நாங்கள் மறுதினமே அரசின் நிலைப்பாடு குறித்து இச் சபையில் அறிவிப்போம் எனக் கூறியதையடுத்தே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. கடந்த வியாழக்கிழமை அறிக்கையொன்றை விடுத்தார். அரசு பதிலளிக்க போதிய கால அவகாசம் வழங்கியுள்ளோம். அடுத்த 7ஆம் திகதி வடக்கு - கிழக்கு தொடர்பாக அரசின் நிலைப்பாட்டைத் தெரிவிக்க கால அவகாசம் வழங்கியுள்ளோம்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைக்க நடாளுமன்றத்தில் பிரேரணை கொண்டு வந்தால் ஆதரிப்பதாக ஐ.தே.கட்சியும் தெரிவித்துள்ளது. நாமும் ஆதரிப்போம். அரசு இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்றார் மாவை சேனாதிராஜா.

மட்டக்களப்பு மாவட்ட கூட்டமைப்பு எம்.பி. எஸ்.கனகசபை இச் செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போது கூறியதாவது:-

எதிர்வரும் 25 ஆம் திகதி வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படவுள்ள ஹர்த்தாலுக்கு கிழக்கிலுள்ள முஸ்லிம்களும் ஆதரவு வழங்கவேண்டும். எமது நிலையைப் புரிந்துகொண்டு கிழக்கில் வாழும் சிங்கள மக்களும் ஆதரவு வழங்குவார் களென நம்புகின்றேன் - என்று தெரிவித்தார். (ஐ)

---

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலில் பொதுமக்களின் 13 வீடுகளும், விநாயகர் ஆலயம், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் என்பனவும் சேதமடைந்தன என்று தகவல் வெளியாகி இருக்கிறது.

குண்டு வீச்சில் சிக்கிக் கால் நடைகளும் உயிரிழந்திருக்கின்றன. (ஐ)

---

## சுவிஸில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியதாவது:-

வன்செயல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றபோதும் இரண்டு தரப்பினருமே பேச்சு நடத்த சம்மதித்திருப்பது அமெரிக்காவிற்கு மகிழ்ச்சியைத் தந்திருக்கின்றது.

தற்போதைய வன்முறைகளுக்கு இலங்கை அரசு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினருமே பொறுப்பேற்க வேண்டும். இங்கு நிலவுகின்ற பதற்ற நிலையைத் தவிர்ப்பதற்காக இரு தரப்பினரும் தம்மாலான அனைத்தையும் செய்யவேண்டும் - என்றார்.

வடக்கு-கிழக்கு இணைப்பு செல்லுபடியற்றது என உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக் குறித்து செய்தியாளர்களிடம் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

''உயர் நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு இந்த நேரத்தில் [illegible] னது'' என்று கூறினார். (த-12)

---

## இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிக்கப்பட வேண்டும். தீவிரவாதிகள் ஊடுருவதைத் தடுத்தால் மட்டும் போதாது. தீவிரவாதிகளுக்குப் பாதுகாப்பும், அடைக்கலமும் கொடுக்கும் நாடுகளின் போக்கையும் மாற்றவேண்டும். தீவிரவாதிகளுக்கு ஆதரவு கொடுப்பதை பாகிஸ்தான் நிறுத்தாத வரை, இந்தியா தற்போதைய வழியில் சென்று பிரச்சினைக் குத் தீர்வு காண முடியாது. தீவிரவாதத்துக்கு எதிராகப் பாகிஸ்தானும், இந்தியாவும் கூட்டு முயற்சியில் ஈடுபடுவது, பாகிஸ் தானின் எண்ணத்தைச் சோதிப்பதற்காகத்தான்.

ஆபத்தான, நிலையற்ற அண்டை நாட்டுடன் (பாகிஸ்தான்) நாம் வசித்துக்கொண்டு இருக்கிறோம். விஞ்ஞான வளர்ச்சி பரவலாகி விட்டதைப் பயன்படுத்தி பேரழிவு ஆயுதங்களும் தயாரிக்கப்படுகின்றன. அண்மையில் வடகொரியாவில் இதைக் காண நேர்ந்தது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் பரவி வருவது கவலை அளிப்பதாக உள்ளது. இலங்கைப் பிரச்சினைக்குக் கூட்டாட்சி அமைப்புக்கு உட்பட்டு தீர்வு காண அர்த்தமுள்ள பேச்சு நடத்துவதில் இரு தரப்பினரும் ஆர்வமுடன் இருக்கிறார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை.''

இவ்வாறு கூறினார். (ஐ)

---

## மோதல்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளுக்கும் இடையில் முன்னெடுக்கப்படும் சமாதான முன்னெடுப்புகளுக்கு சர்வதேச சமூகத்தின் கூடுதலான பங்களிப்பை நோர்வே வலியுறுத்தியுள்ளது.

இம்மாத இறுதியில் ஜெனீவாவில் ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் சந்தித்து பேச்சுகளை நடத்துவதைவிட மீண்டும் சந்திப்பதற்கு இணங்குவதே முக்கியமானது.

இதற்கான முயற்சியில் இந்தியாவும் சர்வதேச சமூகமும் ஈடுபட்டு வருகின்றன. மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினருடனும் அனைத்துலக சமூகம் தனது உறவை அதிகரிக்க வேண்டும் என்பதே நோர்வேயின் விருப்பம் என அவர் தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் பங்கு விலையுடன் கூடிய பங்கு எனச் சுட்டிக்காட்டிய எரிக் சொல்ஹெய்ம் இலங்கைத்தீவின் நிலைவரம் குறித்து ஆழ்ந்த புரிந்துணர்வுடனும், எச்சரிக்கையுடனும் இந்தியா நடந்துகொள்வதாகவும் தெரிவித்துள்ளார். (1)

**பல்கலைக்கழக விண்ணப்ப படிவம்**

- இன்று தொடக்கம் விநியோகம் செய்யப்படும்.
- சனி, ஞாயிறு கடை திறந்திருக்கும்.

பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

**A/L DAY CLASS**

கலை/ வர்த்தகப் பிரிவு

ECO. :B.கஜீதரன் (6.30-7.30)
ACC. :K.பாலகஜன் (2.00-3.00)
COM.: S.சசி (7.30-9.00)
TAM. :G.ஜனகன் (6.45-7.45)
LOGIC:M.பிரகாஷ் (8.00-9.00)
GEO:S.ஜெய்கணேஷ் (9.00-10.00)
DRAMA:S.மயூரன் (6.30-7.30)

ஆரம்பம்-23.10.2006

BRAIN POWER INSTITUTE (சின்னக்கடை சந்தைக்கு அருகில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.